பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 வைகாசி 01 புதன்கிழமை (15-05-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:171

## மீளக் குடியமர அனுமதிக்குமாறு கோரி

# வலி. வடக்கு செயலகம் முன் இன்று அடையாள உண்ணாவிரதப் போர்!

யாழ்ப்பாணம்,மே15

வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்து வேறு இடங்களில் வாழும் மக்கள் 12 அம்சக் கோரிக்கையை முன்வைத்து வலி.வடக்கு பிரதேச செயலகம் முன்பாக இன்று அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

வலிகாமம் வடக்கு புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் தெல்லிப்பழையில் உள்ள பிரதேச செயலகம் முன்பாக இன்று காலை 8மணிககு ஆரம்பமாகும் இந்த உண்ணாவிரதத்துக்கு குடாநாட்டில் உள்ள பல பொதுஅமைப்புகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

கடந்த சுமார் 12 வருடங்களுக்கு முன்னர் இப்பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் இதுவரை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

தற்போது சமாதானச் சூழல் ஏற்பட்டுள்ளபோதும் இந்த நிலை தொடர்வதை அடுத்தே இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த மக்கள் முன்வந்துள்ளனர்.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# சமூகவிரோத செயல்களை ஒருபோதும் அனுமதிக்கோம்!

## புலிகளின் அரசியல்துறை அறிவிப்பு

யாழ்ப்பாணம்,மே15

**யாழ்.குடாநாட்டில் சமூகவிரோத நடவடிக்கைகள், கலாசாரச் சீரழிவுச் செயல்கள் அதிகரித்துள்ளன. இவற்றை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இத்தகைய செயல்கள் தொடர்ந்து இடம்பெற ஒருபோதும் இடமளிக்க மாட்டோம்.**

**இவற்றை அடியோடு ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும்.**

**விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.**

நேற்றுப் பிற்பகல் கொக்குவிலில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை அலுவலகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது அரசியல்துறையினர் இவ்வாறு தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, அரசியல்துறையைச் சேர்ந்த பாப்பா, அருணன் ஆகியோர் இந்தச் சந்திப்பை நடத்தினர்.

அவர்கள் அங்கு தெரிவித்ததாவது:-

கொலை, களவு, கொள்ளை, பாலியல் சேஷ்டைகள், ஆபாசப் படங்கள் காட்டுதல், குழுச்சண் டைகள், சட்டவிரோத மது விற்பனை,

(14 ஆம் பக்கம் பார்க்க)

### முச்சந்தி முரளி



தங்கடை ஆக்கள் செய்த வேலையால தங்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக் குறித்து மட்டும் பேசுகினம். அப்ப மற்றவைக்கு ஏற்பட்ட இழப்பெல்லாம் என்னவாம்.....

## வன்னியில் கண்ணி அகற்றும் பிரிவு குடாநாட்டிலும் செயற்பட விருப்பம்

வவுனியா,மே15

வன்னியில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தமது பணியை குடாநாட்டுக்கும் விஸ்தரிக்க விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றின் ஒத்துழைப்புக் கிடைக்கும் பட்சத்தில் அப்பணியை குடாநாட்டில் ஆரம்பிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாக மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவின் இணைப்பாளர் யோகன் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் சர்வதேச நிபுணர்கள் தற்சமயம் கண்ணிவெடிகளை அகற்றிவருகின்றனர். அவர்களது பணி திருப்திகரமானதாக இல்லை. அவர்கள் கண்ணிகளை அகற்றிய இடங்களில் மீண்டும் வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

எமது பிரதேசம், எமது மக்கள் என்ற அடிப்படையில் இந்தப் பணியில் ஆர்வமுடன் ஈடுபட எமது அமைப்பின் உறுப்பினர்கள் தயாராக உள்ளனர் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# படையினரின் உரிமை மீறல்களால் முழு நாட்டுக்குமே பெரும் அபகீர்த்தி

## பாதுகாப்பு அமைச்சின் செயலர் கூறுகிறார்

கொழும்பு,மே15

படையினரின் மனித உரிமை மீறல் செயல்கள் முழுநாட்டுக்குமே அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டன. இதன் காரணமாக நிதியுதவிகளைப் பெறுவதில் நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மனித உரிமைகள் தொடர்பாக பயிற்சி பெற்ற படையினருக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்றது. அதில் கலந்து பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

சோதனைச் சாவடிகளில் பாலியல்வல்லுறவு புரிதல், இளைஞர், யுவதிகளைக் கைது செய்து சித்திரவதை செய்து கொலை செய்தல், காணாமற் போதல் போன்ற செயல்கள் படையினருக்கு மட்டுமன்றி, முழு நாட்டுக்குமே அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளன.

வடக்கு - கிழக்கில் கூடுதலான மனித உரிமை மீறல்களில் படையினர் ஈடுபட்டுள்ளனர். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், ஐ.நா. போன்றவை இதில் அக்கறை கொண்டுள்ளன. இதன் காரணமாக நாட்டுககு நிதிபெறுவதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது - என்றார். (ம-3)

## தடை மேலும் இரு ஆண்டுகள் நீடிப்பு!

புதுடில்லி,மே15

விடுதலைப் புலிகள் மீதான தடையை இந்தியா மேலும் இரண்டாண்டுகளுக்கு நீடித்துள்ளது.

இந்தியாவிலுள்ள தமிழ் மக்களின் பிரிவினைவாத எண்ணம் வலுப்பட்டு விடாதிருப்பதற்காகவே இந்தத் தடை நீடிக்கப்பட்டிருப்பதாக இந்திய அரசின் அறிக்கை ஒன்று தெரிவித்தது.

நேற்றுமுதல் நீடிக்கப்பட்டுள்ள இந்தத் தடை, தமிழக அரசின் பரிந்துரையின் பேரிலேயே நடிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-12-6)

## அமைச்சர் ரவி சமரவீர வருகிறார்

யாழ்ப்பாணம்,மே15

சமூக நலநோன்புகை அமைச்சின் நடமாடும் சேவையில் கலந்து கொள்வதற்காக அமைச்சர் ரவி சமரவீர எதிர்வரும் 31ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

ஜூன் மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் யாழ்ப்பாணத தில் இந்த நடமாடும் சேவை இடம்பெறவுள்ளது. அமைச்சருடன் அமைச்சின செயலாளர் உட்பட 40 உத்தியோகத்தர்கள் வருகை தரவுள்ளனர்.(க-10)

## கோப்பாய் மாவீரர் இல்ல புனரமைப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே15

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தைப் புனரமைக்கும் பணி நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை 5 மணிக்கு அரசியல் குழுப போராளி பாலையா தலைமையில் நடந்த நிகழ்வில் இந்தப் பணி ஆரம்பமாகியது.

பொதுமக்கள் அங்கம் பெறும் அமைப்புக் குழு ஒன்றும் அங்கு அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி கலந்து கொண்டார். (ம-3)

## டி.ஐ.ஜி. ஒருவர் பதவியில் இருந்து இடைநிறுத்தம்!

கொழும்பு,மே15

பயங்கரவாத தடுப்புப் பிரிவு பிரதிப் பொலீஸ்மா அதிபரான நிஹால் கருணாரத்ன உடனடியாகச் சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

கந்தளாயில் சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகராகப் பணிபுரிந்த சமயம் லஞ்சம் பெற்றார் என்று இவர்மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக விசாரணை நடத்தியபதில் பொலீஸ்மா அதிபர் ஆர்.ஈ. ஆனந்தராஜா உடனடியாக அவரைப் பதவியில் இருந்து இடைநிறுத்தியுள்ளார். (ம)

## இராணுவமுகாம் மூடப்பட்டது

கோப்பாய்,மே15

கோப்பாய் தெற்கு, இராஜ வீதியில் கோப்பாய் பொலீஸ் நிலையத்திற்கு அருகில் அமைந்திருந்த இராணுவ முகாம் நேற்றுமுன்தினம் வாபஸ் பெறப்பட்டுள்ளது. இந்த முகாம் வாபஸ் பெறப்பட்டதையடுத்து அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமரும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். (ம-3)

## அபிவிருத்திக் குழுக்கள் அமைப்பு

செங்கலடி,மே15

மட்டக்களப்பு மாநகரசபை பகுதியில் விடுதலைப் புலிகளின் அரசியல் செயற்பாடுகளை விஸ்தரிக்கும் நோக்கில் கிராமம் கிராமமாக அபிவிருத்திக் குழுக்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. (ம)

## படையினரை வெளியேற வலியுறுத்து!

கொழும்பு,மே15

கிழக்கில் 26 பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை அங்கிருந்து வெளியேறுமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நேற்றுக்காலை இடம்பெற்றது. அங்கேயே இந்தக் கோரிக்கை விடப்பட்டது.

(14 ஆம பக்கம் பார்க்க)

## அறிக்கை சமர்ப்பிப்பு

கொழும்பு,மே15

மட்டக்களப்பு வாகரைக் கடலில் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, தனது அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்துள்ளது.

இந்த அறிக்கை குறித்து அரச உயர்மட்டத் தலைவர்கள் இராணுவ அதிகாரிகளுடன் இணைந்து ஆராய்ந்து வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வாகரைக் கடலில் புலிகளின் ஆயுதம் ஏற்றிவந்த படகு தாக்கப்பட்டதாக இராணுவத்தினரும் மீனவர் படகுகளே தாக்கப்பட்டன என்று புலிகளும் இந்தச் சம்பவம் குறித்துத் தெரிவித்திருந்தனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மீனவர்கள் உட்பட அனைத்துத் தரப்பினரிடமும் கண்காணிப்புக் குழுவினர் விசாரணை நடத்தியிருந்தனர். (ம-6-12)

## பாசையூர் மீனவர்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,மே15

பாசையூர்ப் பகுதி மீனவர்கள் மீது படையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாசையூர் கடற்றொழிலாளர் சங்கம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் கேட்டுள்ளது.

இது தொடர்பாக அச்சங்கம் கண்காணிப்புக் குழுவிடம் சமர்ப்பித்துள்ள முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

புரிந்துணர்வு உடன்பாடு அமுல் செய்யப்பட்ட பின்னரும் பாசையூர் மீனவர்கள் மீதான கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. பாசையூர் இறங்குதுறை மற்றும் கடற்பகுதியில் மீனவர்களின் அடையாள அட்டைகள் பாசீலிக்கப்படுகின்றன. அவர்கள் உடற்சோதனைக்கு உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இந்த நிலையை நீக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவுள்ளது.(ஐ-3)

## அமெ. நாசகாரி ஏன் வந்தது?

கொழும்பு,மே15

சமாதானப் பேச்சுக்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த நேரத்தில் அமெரிக்க நாசகாரி கொழும்பு வந்தது புலிகளை அச்சுறுத்துவதற்காகவா? என்று கேள்வி எழுப்பினார் புதிய இடதுசாரி முன்னணித் தலைவர் விக்கிரமபாகு கருணாரத்ன.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இப்படிக் கேள்வி எழுப்பினார்

நல்லெண்ண விஜயமாக அமெரிக்கக் கப்பல் இலங்கை வரவேண்டுமாயின் சாதாரண கப்பல் வந்திருக்கலாமே. அதைவிடுத்து யுத்தக் கப்பல் இங்கு வந்தது ஏன்?

இடைக்கால நிர்வாக சபை அமைத்து அதனைப் புலிகளிடம் வழங்கப்போவதாக முன்னர் கூறிவந்த பிரதமர் இன்று சுருதியை மாற்றி புதிய கதைகள் விடுகின்றார். ஏன் இந்த மாற்றம் ஏற்பட்டது? - என்று அவர் கேள்வி எழுப்பினார். (ம-3)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த எம்.பி.பி.எஸ். டாக்டருக்கு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த, பண்பான, அடக்கமான, 26 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. சாதகக் குறிப்பு, புகைப்படம் உட்பட முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பொருத்தமற்றவை கண்ணியமாகத் திருப்பி அனுப்பிவைக்கப்படும். விளம்பர இல.1516, மே/பா உதயன். (3715)

## தேவை

தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை செய்யும் பெண்பிள்ளை தங்குவதற்கு சகல வசதிகளுடன் கூடிய அறை (Room) ஒன்று வாடகைக்கு உடன் தேவை (யாழ்நகர எல்லைக்குள்). தொடர்பு: விளம்பர இல.1516, மே/பா உதயன். (3752)

## தவறிவிட்டது

வேலணையைச் சேர்ந்தவரும் யாழ்.மத்திய கல்லூரியில் கல்வி கற்றவருமான யோகராஜா நந்தருபன் என்பவருடைய Record Book மற்றும் O/L, A/L Result Sheet என்பன யாழ். போதனா வைத்தியசாலைக்கும் சிவன் கோயிலுக்கும் இடையில் 13.05.2002 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் வண்ணார்பண்ணை சிவன் பண்ணை வீதியில் உள்ள சிறிராகவி கொமினிக்கேசனில் தொடர்புகொள்ளவும். T.P. No. 2926. (3746)

வண்ணாங்கேணி, பளையில் வசிக்கும் குணசிங்கம் செல்வமணி என்பவருடைய அடையாள அட்டை (இல.486645636V), ஒரு தொகைப் பணம், டயறி என்பன 07.05.2002 அன்று முகமாலைக்கும் கொடிகாமத்துக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கூறிய முகவரியில் ஒப்படைத்துதவவும். (3759)

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக்கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (3723)

## விற்பனைக்கு

ஒருமாதம் நிரம்பிய அல்சேசன் CROSS நாய்க்குட்டிகள் விலை - 2500/=, ஒருமாதம் நிரம்பிய அல்சேசன், ஊர்நாய் CROSS நாய்க்குட்டிகள் விலை - 200/= என்பன விற்பனைக்கு உண்டு. தினமும் நண்பகல் 12.00 மணிக்கு முன் தொடர்புகொள்ளவும். இல.6, நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு (சம்பியன் ஒழுங்கை ஊடாக இராமகிருஷ்ண மிஷன் பாடசாலை பின் வீதியில்). (3737)

## அத்திவாரக் கல் நடும் வைபவம்

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாசாலையின் புதிய நூலகக் கட்டடத்துக்கான அத்திவாரக் கல் நடும் வைபவம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு அதிபர் இ.சிவபாதசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி நிகழ்வில் யாழ். கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி செ.மகாலிங்கம் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் ஜி.சிவபாலன், எம்.கே.ஜி.நிறுவனப் பிரதிநிதி எஸ்.பேரின்பநாதன் ஆகியோரும் கலந்துகொள்வர். நல்லூர் கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.காங்கேயன், முன்னாள் அதிபர் திருமதி க.சுப்பிரமணியம், பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர் சி.அம்பிகாபதி ஆகியோரும் மேற்படி நிகழ்வில் கலந்துகொள்வர். (எ-69)

## இந்து இளைஞர் மன்றத்திற்கு சமய நூல்கள்

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றத்திற்கு இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் ஒரு தொகுதி சமய நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

மேற்படி இந்து இளைஞர் மன்றம் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடத்தும் மாவட்ட மட்டத்திலான சமய அறிவுப் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு பரிசாக வழங்கும் பொருட்டே இந்த சமய நூல்கள் அன்பளிப்புச் செய்யப்பட்டிருப்பதாக மன்றத்தின் தலைவர் தெரிவித்தார். (க-17)

# தூத்துக்குடியில் இருந்து கப்பலில் சிமெந்து வருகிறது

யாழ்ப்பாணம்,மே15

இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து 28 ஆயிரம் மெற்றிக் தொன் சிமெந்தை ஏற்றிக் கொண்டு 'இந்துரு வலி' கப்பல் பருத்தித்துறைக்கு வரவுள்ளது.

தனியாருக்குரிய சிமெந்துடன் வரும் இக்கப்பல், ஓரிரு தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும் என்று யாழ்.செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

புனர்வாழ்வு, அபிவிருத்தி அதிகார சபைக்கான ஒரு தொகுதி பொருள்களுடனும், அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகத்துக்கான நிவாரணப் பொருள்களுடனும் 'ருகுணுபுர' கப்பல் இந்தவார இறுதியில் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து சேரவுள்ளது. (க-10)

# எம் இனிய நல்வாழ்த்துக்கள்

யாழ்.மண்ணில் பாதம் பதிக்கும்

☆ செலான் வங்கி

☆ செலிங்கோ ட்ரவல்ஸ் அன் டுவர்ஸ்

☆ செலிங்கோ குளோபல் சேர்விசன்

ஆகிய நிறுவனத்தினரும் யாழ்ப்பாணத்தில் இன்று தமது சேவையை ஆரம்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன், இவர்களது சேவைகள் மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

## சுமங்கலி ஜுவல்ஸ்

கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (C/22117)

# கண்ணீர் அஞ்சலி

எம்முடன் கடமைபுரியும் திரு.ப.நடராசா அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி கனகம்மா பரமசாமி

அவர்களது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்.
(3754)

# உழவு இயந்திர உரிமையாளர் சங்கம்

## அவசர கலந்துரையாடல்

முக்கியமான பிரச்சினைகள் குறித்து கலந்துரையாட வேண்டியுள்ளதால் அனைத்து உறுப்பினர்களையும் இன்று 15ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 3 மணிக்குச் சங்கப் பணிமனைக்குச் சமுகமளிக்குமாறு வேண்டுகிறோம்.

*குறிப்பு: சமுகமளிக்கத் தவறும் உழவு இயந்திர உரிமையாளர் பதிவுகள் இரத்தாகும்.*

மா.செல்வமாணிக்கம்
*தலைவர்*

க.சிவலிங்கம்
*செயலாளர்*

*"வல்லிபுரம்"*
*புலோலி.*
(3757)

# ஐந்தாம் ஆண்டு நினைவில்....

15-05-2002

| பிறப்பு | | வீரச்சாவு |
|---|---|---|
| 30 - 06 - 1975 | | 15 - 05 - 1997 |

## லெப்டினன்ட் கேணல் ரத்தி

(கிருஸ்ணபிள்ளை சுபாஜினி - வன்னி)

*சம்பவம்* :- நெடுங்கேணியில் ஜயசிக்குறு வழிமறிப்புச் சமரில்.....

நால்வரில் ஒருவராய் அவதரித்தாய்
நாயகன் வழியில் உயிர்கொடுத்தாய் - உன்
அண்ணனும் அக்காளும் புலியணிசேர - நீயும்
தலைவனின் அக்கினிக்குஞ்சானாய்.....

தாய்க்கு நீ சுபாஜினியாய் - எம்
தலைவனுக்கு நீ ரத்தியாய்.....
மாலதி படையணியில் - நீ
மகத்தான தளபதியாய்.....
ஜயசிகுறுவை சிதறடித்து - நீ
வீழ்ந்த போது..... தேசம்மட்டுமல்ல
எம் உணர்வுகளும் சிலிர்த்தன!.....
உன் பணி தொடரும்..... ஈழம் மலரும்.....

*வன்னி.* (3753) - குடும்பத்தினர்.

# செலிங்கோ வீட்டு வசதி கடனுதவிச் சங்கம் (லிமிட்)

CBSL



இலங்கையின் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் கீழ்
முதலாவதாக நிறுவப்பட்ட தனியார் நிறுவனம்

**செலிங்கோ வீடமைப்புக் கடன் சங்கமாகும்.**

இச்சங்கத்திலே அங்கத்துவம் வகிக்கும் அனைவரும் தங்களது பணத்தைச் சேமிப்பதன் மூலம் குறைந்த வட்டி வீதத்துடனும், கூடிய கால மீளளிப்புச் சலுகைகளையும் கொண்டு வீடமைப்புக் கடன் ஒன்றைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பை அடைகின்றனர். இவ்வாறு இச்சங்கத்தில் இணைவதன் மூலம் தங்கள் பணத்தை ஆயுள்பூராக வைப்பிலிட்டு எம்முடன் நீண்டகால உறவை வளர்த்துக்கொள்ள முடியும். மேலும் தங்கள் தங்களது சேமிப்பிற்கு உயர்ந்த பாதுகாப்பைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இவ்வீடமைப்புச் சங்கத்தின் எண்ணக்கருவானது பிரபல்யம் பெற்றமை ஐக்கியராச்சியத்திலே ஆகும். அங்கே 90%மான வீட்டுக்கடன்கள் அடமான வைப்புடன் வழங்கப்படுகின்றன.

சில வீடமைப்புச் சங்கங்களாவன:
குறிப்பாக **Halifax** (கலிபக்ஸ்) மற்றும் **Leeds** போன்றவை
காலப்போக்கில் வங்கிகளாக மாற்றம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.
இச்சங்கத்திலே எமது நாட்டில் நூற்றுக்கணக்கானோரின் அங்கத்துவம்
காரணமாக இலங்கையின் பல பாகங்களிற்கும் கிளைகள் நிறுவ
**செலிங்கோ ஸ்தாபனம்** திட்டமிட்டது.

இலக்கம் 315, ஆர்.ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 3 என்ற முகவரியைத் தலைமையகமாகக் கொண்ட செலிங்கோ வீடமைப்புச் சங்கத்தின் 12ஆவது புதிய கிளை இலக்கம் 164, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் இன்று (15.05.2002) புதன்கிழமை நண்பகல் 12.30 மணிக்கு ஆரம்பிக்கப்படுகின்றது.

செலிங்கோ வீடமைப்புக் கடன் சங்கம் லிமிட்டெட் திட்டமானது,
செலிங்கோ கொன்சொலிடேட்டட் நிறுவனத்தின் தலைவர்

**தேசமான்ய லலித் கொத்தலாவல**

அவர்களின் சிந்தனையின் உருவாக்கமாகும்.

இச்சங்கமானது செலிங்கோ நிறுவனத்தின் தலைமைச்சட்டப் பணிப்பாளரும்
செலிங்கோ நிறுவனத்தின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி **செல்வி மாலா சபாரெத்தினம்**
அவர்களுடைய திறமையான தலைமைத்துவத்தின் கீழ் இயங்குகிறது. செல்வி மாலா சபாரெத்தினம் அவர்கள் சொன்ரா 25 (Zonta 25) நிறுவனத்தின் ஆளுநராகவும் மகளிர் சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் போன்ற தலைமைத்துவப் பதவிகளைச் செவ்வனே வகித்து வருகின்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

(C/22127)

# பல்கலைக்கழக அனுமதி – கல்வி ஆண்டு 2002 / 2003

## மாவட்ட ரீதியாக பல்வேறு கற்கை நெறி தெரிவுக்கான Z புள்ளி முறை

| மாவட்டம் | மருத்துவம் | பல் மருத்துவம் | விலங்கியல் மருத்துவம் | விவசாயம் | உணவும் போசனையும் | உயிரியல் விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (உயிரி. விஞ்.) | பொறியியல் (MPR) | பொறியியல் (EM) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.8849 | 1.8182 | 1.7695 | 1.1557 | 1.4439 | 1.5412 | 1.3571 | 1.8155 | 1.7079 |
| கம்பஹா | 1.6052 | 1.5980 | 1.5487 | 1.2412 | 1.3433 | 1.3501 | 1.2355 | 1.5626 | 1.5266 |
| களுத்துறை | 1.6542 | 1.6421 | 1.6233 | 1.2427 | 1.3805 | 1.2774 | 1.2196 | 1.6479 | 1.5568 |
| மாத்தளை | 1.6618 | 1.6596 | 1.6247 | 1.4849 | 1.3439 | 1.2411 | 1.2301 | 1.5730 | 1.5197 |
| கண்டி | 1.8183 | 1.8006 | 1.7650 | 1.4958 | 1.3517 | 1.3632 | 1.3320 | 1.6986 | 1.6597 |
| நுவரெலியா | 0.9493 | 0.9235 | 0.8813 | 0.4140 | 0.7667 | 0.5334 | 0.4608 | 0.5956 | 0.5754 |
| காலி | 1.8293 | 1.8183 | 1.7727 | 1.4127 | 1.3785 | 1.3823 | 1.3595 | 1.8026 | 1.6915 |
| மாத்தறை | 1.8228 | 1.8067 | 1.7748 | 1.4222 | 1.3999 | 1.3815 | 1.3514 | 1.7790 | 1.7155 |
| அம்பாந்தோட்டை | 1.6988 | 1.6934 | 1.6749 | 1.4087 | 1.4077 | 1.2522 | 1.2264 | 1.7025 | 1.6524 |
| யாழ்ப்பாணம் | [illegible] | [illegible] | [illegible] | 1.2563 | 1.3365 | 1.2613 | 1.2228 | 1.7383 | 1.7080 |
| கிளிநொச்சி | [illegible] | [illegible] | 1.3242 | 1.2267 | 1.3234 | 0.8519 | 0.8515 | 1.4188 | 0.8823 |
| மன்னார் | 0.9070 | 0.8290 | [illegible] | 0.3109 | 0.6899 | 0.3460 | 0.3457 | 0.7933 | 0.7312 |
| முல்லைத்தீவு | 1.1744 | 1.1743 | 1.1514 | 1.0157 | 1.0046 | 0.7418 | 0.6821 | 1.7069 | 1.5603 |
| வவுனியா | 1.7940 | 1.7542 | 1.7365 | 1.2676 | 1.4242 | 1.1915 | 1.1743 | 1.7611 | 1.5214 |
| திருகோணமலை | 1.3479 | 1.6062 | 1.3435 | 1.2129 | 1.1180 | 0.8815 | 0.8646 | 1.1814 | 1.1183 |
| மட்டக்களப்பு | 1.4493 | 1.4469 | 1.4415 | 1.2022 | 1.3785 | 1.0444 | 1.0351 | 1.4182 | 1.3899 |
| அம்பாறை | 1.3823 | 1.3565 | 1.3455 | 1.2330 | 1.2812 | 1.0551 | 1.0821 | 1.4214 | 1.3720 |
| புத்தளம் | 1.5215 | 1.5104 | 1.5063 | 1.3575 | 1.4304 | 1.2290 | 1.2096 | 1.3705 | 1.3091 |
| குருநாகல் | 1.7515 | 1.7469 | 1.7175 | 1.3520 | 1.3314 | 1.3345 | 1.3037 | 1.5982 | 1.5890 |
| அனுராதபுரம் | 1.5889 | 1.5831 | 1.5481 | 1.3309 | 1.2490 | 1.1853 | 1.1536 | 1.3936 | 1.3741 |
| பொலன்னறுவை | 1.2883 | 1.2625 | 1.2513 | 0.9176 | 1.2315 | 0.8910 | 0.7908 | 0.8552 | 0.8147 |
| பதுளை | 1.4681 | 1.4271 | 1.3735 | 1.1178 | 1.3210 | 0.9817 | 0.9651 | 1.3325 | 1.2759 |
| மொனறாகலை | 1.0217 | 1.0098 | 0.9844 | 0.8101 | 0.8479 | 0.5449 | 0.5362 | 0.8656 | 0.8229 |
| கேகாலை | 1.5856 | 1.5722 | 1.5643 | 1.4198 | 1.2984 | 1.2667 | 1.2406 | 1.5746 | 1.5565 |
| இரத்தினபுரி | 1.5939 | 1.4722 | 1.4370 | 1.3163 | 1.2822 | 1.2304 | 1.1948 | 1.5792 | 1.5702 |

| மாவட்டம் | பொறியியல் (TM) | அளவியல் விஞ்ஞானம் (QS) | கொம்பியூட்டர் விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | அளவியல் விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (பௌதிக - விஞ்) | முகாமைத்துவக் கல்வி | தோட்ட முகாமைத்துவமும் மதிப்பீடும். | வர்த்தகம் | கலை | கலை (SPP)* ஊடகத்துறை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.7484 | 1.3705 | 1.7559 | 1.2679 | 1.3265 | 1.1558 | 1.6667 | 1.6094 | 1.5287 | 1.2405 | 1.0062 |
| கம்பஹா | 1.5116 | 0.9234 | 1.5310 | 1.0782 | 1.2876 | 1.0353 | 1.5893 | 1.5837 | 1.5139 | 1.1908 | 1.0062 |
| களுத்துறை | 1.6390 | 0.5817 | 1.6229 | 1.0677 | 1.4614 | 1.0013 | 1.5599 | 1.5598 | 1.5011 | 1.2405 | 1.0062 |
| மாத்தளை | 1.5705 | NQC | 1.5596 | 1.0136 | 1.2312 | 0.9345 | 1.3891 | 1.5620 | 1.2858 | 1.1976 | NQC |
| கண்டி | 1.6789 | 1.1776 | 1.6797 | 1.1656 | 1.4630 | 1.1194 | 1.5673 | 1.5544 | 1.4955 | 1.2405 | 1.0062 |
| நுவரெலியா | 0.5726 | NQC | 0.5677 | 0.4556 | 0.5525 | 0.5096 | 1.3174 | 1.3393 | 1.2181 | 1.1144 | NQC |
| காலி | 1.7436 | 1.2633 | 1.7567 | 1.2646 | 1.4618 | 1.1538 | 1.6195 | 1.6022 | 1.5073 | 1.2405 | 1.0062 |
| மாத்தறை | 1.7345 | 1.2596 | 1.7227 | 1.2119 | 1.4932 | 1.1455 | 1.6256 | 1.6097 | 1.5067 | 1.2405 | NQC |
| அம்பாந்தோட்டை | 1.6857 | 1.3334 | 1.6820 | 1.0241 | 1.5392 | 0.9866 | 1.5563 | 1.5455 | 1.4111 | 1.2405 | NQC |
| யாழ்ப்பாணம் | 1.7344 | 1.2037 | 1.7244 | 1.2442 | 1.4820 | 1.1379 | 1.4992 | 1.4608 | 1.4367 | 1.2405 | NQC |
| கிளிநொச்சி | 1.3479 | NQC | 1.3043 | 0.8185 | 1.1964 | 1.1239 | 1.4040 | 1.3255 | 1.3418 | 1.2405 | NQC |
| மன்னார் | 0.7490 | NQC | 0.7051 | 0.4478 | 0.6016 | NQC | 1.0547 | 0.9590 | 0.8797 | 1.0448 | NQC |
| முல்லைத்தீவு | 1.6986 | 1.4134 | 1.6912 | 1.1684 | 1.4806 | 1.1433 | 1.6352 | 1.341 | 1.4258 | 1.2405 | NQC |
| வவுனியா | 1.5283 | 1.3956 | 1.4741 | 1.0853 | 1.2616 | 1.0579 | 1.3908 | 1.3744 | 1.3798 | 1.2405 | NQC |
| திருகோணமலை | 1.1322 | 1.0121 | 1.0846 | 0.5652 | 1.0546 | 0.5138 | 1.1869 | 1.3138 | 1.0344 | 1.2399 | NQC |
| மட்டக்களப்பு | 1.4147 | 1.0205 | 1.3294 | 0.8598 | 1.1652 | 0.8423 | 1.3691 | 1.2787 | 1.2678 | 1.2013 | NQC |
| அம்பாறை | 1.3657 | 1.3010 | 1.4177 | 0.7605 | 1.3240 | 1.0730 | 1.3625 | 1.3558 | 1.1678 | 1.2405 | NQC |
| புத்தளம் | 1.3307 | NQC | 1.3007 | 0.9873 | 1.2771 | 0.8459 | 1.4220 | 1.5617 | 1.3414 | 1.2337 | NQC |
| குருநாகல் | 1.5953 | 0.7165 | 1.5771 | 1.1449 | 1.4771 | 1.0831 | 1.5471 | 1.5838 | 1.4772 | 1.2126 | 1.0062 |
| அனுராதபுரம் | 1.3926 | 1.3297 | 1.3671 | 0.9093 | 1.3409 | 0.8756 | 1.3926 | 1.5229 | 1.3174 | 1.2405 | NQC |
| பொலன்னறுவை | 0.8257 | NQC | 0.7990 | 0.4309 | 0.7236 | NQC | 1.3448 | 1.4993 | 1.2567 | 1.1181 | NQC |
| பதுளை | 1.3402 | 1.3140 | 1.3178 | 0.7150 | 1.2112 | 0.6784 | 1.4534 | 1.6136 | 1.2731 | 1.1634 | NQC |
| மொனறாகலை | 0.8119 | NQC | 0.8219 | 0.4322 | 0.7268 | NQC | 1.3529 | 1.3526 | 1.1555 | 1.2405 | NQC |
| கேகாலை | 1.5581 | 1.3192 | 1.5646 | 1.0375 | 1.3211 | 1.0012 | 1.6242 | 1.6152 | 1.4881 | 1.1966 | NQC |
| இரத்தினபுரி | 1.5594 | 0.7720 | 1.7446 | 1.0625 | 1.4758 | 1.0007 | 1.5433 | 1.5781 | 1.4532 | 1.2405 | 1.0062 |

முகாமைத்துவக்கல்வி (S.J.T) A - வர்த்தகப் பிரிவு, B - A/L பிரிவு
கலை (S.A.B) A - கலைப் பிரிவு, B - A/L பிரிவு

* அகில இலங்கை ரீதியில் தகுதி அடிப்படையில் 100வீத தெரிவு.
NQC - பரீட்சார்த்தி தெரிவுசெய்யப்படவில்லை.

| மாவட்டம் | கலை (SP)* | கலை (SAB)*-A | கலை (SAB)*-B | முகாமைத்துவக் கல்வ (SJT) -A | முகாமைத்துவக் கல்வ (SJT) -B | கட்டடக் கலை | வரைபடம் | சட்டம் | தகவல் தொழில்நுட்பம் | முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும் | பொது முகாமைத்துவம் (நிர்வாகம்) | தொடர்பாடற்கல்வி* |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4920 | 1.4681 | 1.0626 | 0.8857 | 1.6998 | 1.7464 | 1.2664 | 1.6169 | 1.1500 |
| கம்பஹா | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4864 | 1.4625 | 0.4370 | 0.4844 | 1.6155 | 1.4919 | 0.8055 | 1.5598 | 1.1500 |
| களுத்துறை | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4939 | 1.4571 | 0.9844 | 0.5031 | 1.7239 | 1.5789 | 0.8464 | 1.6116 | 1.1500 |
| மாத்தளை | NQC | NQC | NQC | 1.2711 | 1.2642 | 0.5658 | NQC | 1.6169 | 1.3563 | 1.0899 | 1.4900 | 1.1500 |
| கண்டி | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4773 | 1.4663 | 0.8044 | 0.8899 | 1.6232 | 1.6042 | 1.1231 | 1.5689 | 1.1500 |
| நுவரெலியா | NQC | 1.2273 | NQC | 1.1759 | 1.1630 | NQC | NQC | 1.3780 | NQC | NQC | 1.3821 | NQC |
| காலி | 1.0496 | 1.2773 | 1.4000 | 1.4846 | 1.4571 | 0.9541 | 0.5153 | 1.7279 | 1.7695 | 1.2459 | 1.6023 | 1.1500 |
| மாத்தறை | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4920 | 1.4699 | 0.7699 | 1.0028 | 1.6779 | 1.7378 | 0.9116 | 1.6149 | 1.1500 |
| அம்பாந்தோட்டை | NQC | 1.2273 | 1.4000 | 1.4551 | 1.4110 | 0.9083 | NQC | 1.4377 | 1.6494 | NQC | 1.6298 | 1.1500 |
| யாழ்ப்பாணம் | NQC | 1.2273 | 1.4000 | 1.4131 | 1.4110 | NQC | NQC | 1.4055 | 1.6422 | NQC | 1.4049 | 1.1500 |
| கிளிநொச்சி | NQC | NQC | NQC | 1.3248 | 1.3068 | NQC | NQC | 1.2034 | NQC | NQC | 1.2105 | NQC |
| மன்னார் | NQC | NQC | NQC | 0.8654 | 1.1160 | NQC | NQC | 1.3713 | NQC | NQC | 0.8231 | NQC |
| முல்லைத்தீவு | NQC | 1.2273 | NQC | 1.4242 | 1.3793 | NQC | NQC | 1.1649 | NQC | NQC | 1.5873 | NQC |
| வவுனியா | NQC | 1.2273 | NQC | 1.3598 | 1.3541 | NQC | NQC | 1.4251 | 1.3620 | NQC | 1.3818 | 1.500 |
| திருகோணமலை | NQC | NQC | NQC | 1.1850 | 1.1681 | NQC | NQC | 1.5108 | 1.1233 | NQC | 1.2679 | NQC |
| மட்டக்களப்பு | NQC | 1.2273 | NQC | 1.2494 | 1.2367 | NQC | NQC | 1.4630 | 1.1953 | NQC | 1.2661 | 1.1500 |
| அம்பாறை | NQC | NQC | NQC | 1.1629 | 1.2035 | NQC | NQC | 1.4980 | 1.3456 | NQC | 1.2420 | 1.1500 |
| புத்தளம் | 1.0496 | 1.2273 | NQC | 1.3281 | 1.3098 | 0.7365 | 0.6050 | 1.6566 | 1.4172 | 1.6326 | 1.6040 | 1.1500 |
| குருநாகல் | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4693 | 1.4551 | 0.5713 | 0.6402 | 1.7066 | 1.5712 | 2.0401 | 1.6314 | 1.1500 |
| அனுராதபுரம் | NQC | 1.2273 | NQC | 1.3083 | 1.2738 | 0.9159 | 0.5519 | 1.5928 | 1.7695 | 1.6499 | 1.5425 | 1.1500 |
| பொலன்னறுவை | NQC | NQC | NQC | 1.3229 | 1.2569 | NQC | NQC | 1.2088 | NQC | NQC | 1.5084 | NQC |
| பதுளை | 1.0496 | NQC | NQC | 1.3212 | 1.2695 | 0.8215 | NQC | 1.5504 | 1.4779 | NQC | 1.5873 | NQC |
| மொனறாகலை | NQC | 1.2273 | NQC | 1.3209 | 1.2733 | NQC | NQC | 1.4403 | NQC | NQC | 1.3100 | 1.1500 |
| கேகாலை | NQC | 1.2273 | 1.4000 | 1.4773 | 1.4568 | 0.8163 | NQC | 1.5424 | 1.5561 | NQC | 1.6169 | 1.1500 |
| இரத்தினபுரி | 1.0496 | 1.2273 | 1.4000 | 1.4384 | 1.4329 | 1.0806 | NQC | 1.6314 | 1.5569 | NQC | 1.5342 | 1.1500 |

## துர்நாற்றம் வீசிய நிலையில் வயோதிபரின் சடலம் மீட்பு!

யாழ்ப்பாணம்,மே15

கடந்த 7ஆம் திகதியில் இருந்து காணாமல் போனதாகக் கூறப்படும் வயோதிபர் ஒருவர் ஆள்கள் அற்ற வீட்டில் இருந்து நேற்று சடலமாக மீட்கப்பட்டார்.

ஓடைலேன், வண்ணார்பண்ணையைச் சேர்ந்த செல்லப்பா அரியகுட்டி (வயது -70) என்ற வயோதிபரின் சடலமே நேற்று துர்நாற்றம் வீசிய நிலையில் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர் எவ்வாறு உயிரிழந்தார் என்பது மர்மமாகவே உள்ளதாகக் கூறப்படுகிறது. யாழ்.பொலீஸாரினால் நேற்று பிற்பகல் போதனா வைத்திய சாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகளுக்காக சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

(ம-6-15)

## 60வயது முதியவர் அடித்துக் கொலை: கரணவாய்ப் பகுதியில் சம்பவம்

அறுவது வயது முதியவர் ஒருவரை ஆறு இளைஞர்கள அடித்துக் கொன்றதாகக் கூறப்படும் சம்பவம் நேற்றுமுன்தினம் கரணவாய் பண்டாரவத்தைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இதே இடத்தைச் சேர்ந்த சுப்பன் கந்தசாமி (வயது60) என்னும் முதியவரே அடித்துக் கொல்லப்பட்டவராவார்.

அவரது சடலத்தை பருத்தித்துறை நீதிவான நேரில் சென்று பார்வையிட்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டதையடுத்து சடலம் மந்திகை ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி.கதிரவேற்பிள்ளையினால் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது.

இச்சம்பவத்தையடுத்து இப் பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்களைப் பொலீஸார் கைது செய்துள்ளனர்.

(ம-117)




செலான் வங்கியின் யாழ்.கிளை அலுவலகம் ஆஸ்பத்திரி வீதியில் இன்று திறந்துவைக்கப்படுகின்றது. அலுவலகக் கட்டடத்தின் கம்பீரத் தோற்றத்தை படத்தில் காணலாம்.

## தலைநகரின் பாதுகாப்பை பலப்படுத்த புதிய செயலணி

தலைநகர் கொழும்பின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்காக இராணுவமும் பொலீஸும் இணைந்து புதிய செயலணி ஒன்றை உருவாக்க விருக்கின்றன.

இதற்கான உத்தரவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்துள்ளார்.

இந்தச் செயலணியை உருவாக்குவதற்காக ஐவர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில் இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, பிரதிப் பொலீஸ் மா அதிபர் போதிலியனகே ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். (ம-3)

## மருந்துகள் வந்தன

கொழும்பிலிருந்து தரைவழிப் பாதையூடாக நேற்று மூன்று லொறிகளில் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு மருந்துவகைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவ்வருடத்திற்கான இரண்டாவது காலாண்டுக்கான சகல மருந்துவகைகளும் நேற்று எடுத்துவரப்பட்டன. எனினும் சில முக்கிய மருந்துவகைகள் கேட்கப்பட்ட தொகையிலும் குறைவாகவே அனுப்பிவைக் கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(ம-15)

## லொறி - சைக்கிள் விபத்தில் காயமடைந்த யுவதி மரணம்

யாழ்ப்பாணம்,மே15

ஓடுகளை ஏற்றிவந்த லொறி ஒன்றும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் வந்த இளம் யுவதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனளிக்காத நிலையில் அங்கு மரணமானார்.

நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் நெல்லியடிச் சந்திக்கு அண்மையில் நடந்த இந்த வீதி விபத்தில் அமிர்தலிங்கம் லதா (வயது - 17, ஆலடி, கரணவாய் மேற்கு) என்ற இளம் யுவதியே உயிரிழந்தவராவார்.

தென்பகுதியில் இருந்து குடாநாட்டுக்கு விற்பனைசெய்ய ஓடுகளை ஏற்றி வந்த லொறியுடனேயே இந்த விபத்து இடம்பெற்றது.

காயமடைந்த யுவதி நேற்றுமுன்தினம் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்போதனா வைத்தியசாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பயனின்றி நேற்று அவர் உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனை மற்றும் மரணவிசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை -

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுள்ள நெல்லியடிப் பொலீஸார் சம்பந்தப்பட்ட லொறியினைத் தடுத்து வைத்துள்ளனர்.

(ம-6-15-139)

## பணிகள் வழமைக்குத் திரும்பின

கடந்த இரு வாரங்களாக யாழ். கல்வி வலயம், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனை ஆகியவற்றின் முன்பாக தொண்டர் ஆசிரியர்களும், பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களும் மேற்கொண்டுவந்த மறியற் போராட்டம் நேற்றுமுன்தினம் இடைநிறுத்தப்பட்டதை அடுத்து நேற்று கல்வி வலயத்தினதும், மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையினதும் பணிகள் வழமை போன்று இடம்பெற்றன.

(ம-10)

# வடக்கு - கிழக்கில் ஒரேநாளில் மக்கள் எழுச்சிப் போராட்டம்

கொழும்பு,மே15

தமிழ் மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் வடக்கு - கிழக்கில் மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் நடத்தப்படவிருப்பதாக ரெலோ முதல்வரும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் வகையில் மேற்கொள்ளப் பட்டுவரும் சமாதான முயற்சிகளை எதிர்த்து தென்னிலங்கையில் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆர்ப்பாட்டங்கள், பேரணிகளைக் கண்டித்தே இந்த மக்கள் எழுச்சிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது.

வடக்கு - கிழக்கின் சகல மாவட்டங்களிலும் ஒரே நாளில் இப்போராட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

தமிழ் மக்கள் ஏனைய இனமக்களின் உரிமைகளைப் பறிப்பதற்காகப் போராடவில்லை. தமது உரிமை களைப் பெற்றுக் கொள்வதற்காகவே போராடி வருகின்றார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தவே இந்த மக்கள் எழுச்சிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்படுவதாக செ.அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (ஐ-4)

---

உதயன்

## குழப்பும் சக்திகளை அடையாளம் காண்பது அவசியம்

“தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள வன்னிப் பகுதி வானில் ஆளில்லாத வேவு விமானங்கள் அடிக்கடி பறந்து திரிகின்றன. இதனால் பொதுமக்கள் - குறிப்பாக மாணவர்கள் - பெரும் அச்சமடைந்துள்ளனர்.

இந்த விஷயத்தை உடனடியாக அரசின் கவனத்துக்குக் கொண்டுவந்து அதைத் தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுங்கள்.’

- இப்படி சர்வதேச கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்ட் புருகோவிட்டிடம் முறைப்பாடு செய்திருக்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

ஆளில்லா விமானங்கள் நிலைமையைக் கண்காணிப்பவை; வேவு பார்ப்பவை.

யுத்த காலத்தில் புலிகளின் நிலைகளை உளவு பார்க்கவும், இலக்குகளை அடையாளங்கண்டு குண்டு வீச்சு விமானங்களுக்கு வழிகாட்டவும் பயன்பட்டவை இந்த ஆளில்லாத வேவு விமானங்கள்.

தற்போதைய யுத்தநிறுத்த காலத்தில் - அமைதி வேளையில் - இந்த விமானம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தின் மீது அடிக்கடி பறந்து திரிந்து வேவு பார்க்கின்றது. ஒருவகையில் பார்த்தால் இதுவும் இராணுவ நடவடிக்கைகளின் ஒரு பகுதியே. அதனால் இது யுத்தநிறுத்த மீறல் செயற்பாடாகின்றது.

தமிழ்ப் பகுதிகளில் இயல்பு நிலையையும் சமாதானத்தையும் பேணிக்காக்க வேண்டிய இத்தகைய முக்கிய சந்தர்ப்பத்தில் இவ்வாறான யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபடுவது வீண் குழப்பங்களுக்கே வழிசெய்யும்.

அரசு - புலிகள் ஆகிய இரு தரப்புகளுக்கும் இடையே ஒரு நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை ஏற்படுத்துவதன் மூலம், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத்தீர்வு காண்பதற்கான அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும் என்பது திண்ணம்.

அதற்காகவே - இத்தகைய நல்லெண்ணப் புறச்சூழ்நிலையை உருவாக்குவதற்கு முன்னேற்பாடாகவே - புரிந்துணர்வு உடன்படிக்கையை இரு தரப்பினரும் செய்துகொண்டனர்.

ஆறி, அமரப் பேசித் தீர்மானிக்கப்பட்டது இந்த புரிந்துணர்வு உடன்படிக்கை. இன்ன, இன்ன காலத்தில் இவை, இவை செய்யப்படவேண்டும் என்ற திட்டவட்டமான ஏற்பாடுகள் விலாவரியாக அதிலுள்ளன. உடன்படிக்கையில் குறிப்பிட்டபடி அவையவற்றை, அந்தந்த காலத்தில் செய்து முடிப்பதன்மூலம் - நிறைவேற்றுவதன் வாயிலாக - பேச்சுக்கான நல்லெண்ணப் புறச்சூழ்நிலையைத் தோற்றுவிக்கமுடியும்; நீடித்த அமைதியைப் பேண முடியும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்தத் தவறுவது - அல்லது நிறைவேற்ற மறுத்து முரண்டுபிடிப்பது - வீண் குழப்பங்களுக்கும் மீண்டும் போருக்கும் வழிசெய்துவிடலாம்.

புலிகளின் பகுதிகள் மீது வேவு விமானங்களைப் பறக்கவிட்டு உளவு பார்ப்பது புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு முரணான செயலாகும்.

அதேபோன்று, வடக்கு - கிழக்கில் படையினர் நிலைகொண்டுள்ள பொது இடங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் போன்றவற்றிலிருந்து படையினர் விலக மறுப்பதும் புரிந்துணர்வு உடன்படிக்கையை வேண்டுமெனறு மீறும் செயலாகவே கணிக்கப்படவேண்டியதாகும்.

வடக்கில் மட்டும் 32 பாடசாலைகளில் நிலைகொண்டுள்ள படையினரை இப்போதைக்கு அவற்றில் இருந்து விலக்கிக்கொள்ள முடியாது என்று படையதிகாரிகள் ஒரேயடியாக மறுத்திருக்கின்றார்கள்.

இபபடி, புரிந்துணர்வு உடன்படிக்கையில் காணப்பட்ட இணக்கத்தை நடைமுறைப்படுத்த மறுத்து, பின்னிற்பது, சமாதான நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை நிச்சயம் பாதிக்கும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில்தான் பேச்சு மேசைக்கு இருதரப்பும் செல்வது தங்கியிருக்கின்றது என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயமாகும்.

எனவே, இவ்வாறு உடன்படிக்கை ஏற்பாடுகளைப் பூர்த்திசெய்ய விடமால் முட்டுக்கட்டை போடுவதன்மூலம் பேச்சுக்கான வாய்ப்புக்களைத் தாமதப்படுத்த முயற்சிகள் நடக்கின்றனவோ என்ற சந்தேகம் எழுவது இயல்பானதே.

சமாதானத்துக்கான அமைதிப் பேச்சுக்களை தென்னிலங்கையின் பேரினவாத சிங்கள சக்திகள் முழுமூச்சாக எதிர்க்கின்றன. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அவை கங்கணம் கட்டி நிற்கின்றன.

இத்தகைய சூழ்நிலையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பாடுகளை நிறைவேற்றவிடாது முட்டுக்கட்டை போடுவதன்மூலம் பேச்சுக்கான வாய்ப்புக்களைத் தாமதிக்கச் செய்ய எடுக்கும் நடவடிக்கைகளுக்கும் இந்தப் பேரினவாத சக்திகளுக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ தொடர்புகள் இருக்கலாம் என்ற தீவிர சந்தேகம் எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது.

அமைதி முயற்சிகள் குழம்பாமல் பேணிப்பாதுகாப்பதற்காக மட்டுமல்லாமல் தனது ஸ்திரத் தன்மை கருதியும் இத்தகைய தொடர்புகள் குறித்து உன்னிப்பாகக் கவனித்து, ஆராய்ந்து, விசாரித்து உரிய நடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பும் கடமையுமாகின்றது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை முழு அளவில் நடைமுறைப்படுத்த விடாது தடுக்கும் சக்திகள் எவை என்பதை நேரகாலத்துடன் கண்டுபிடித்து உரிய வேளையில், உரிய நடவடிக்கை எடுப்பது அரசுக்கும் நல்லது; சமாதான முயற்சிகளுக்கும் அவசியமானது.

---

## பிந்துனுவெவ முகாம் படுகொலை விசாரணை 28இல் ஆரம்பம்

கொழும்பு,மே15

பிந்துனுவெவ தடுப்பு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணை எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

சரத் அம்பேப்பிட்டிய, எரின் தசநாயகா, உபாலி அபயவர்த்தன ஆகிய மேல்நீதிமன்ற நீதிபதிகள் அடங்கிய குழு விசாரணையை நடத்தவுள்ளது.

இந்த வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப்படவிருந்தது.

பதுளை சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் முன்னிலையில் சம்பந்தப் பட்டவர்கள் அளித்த வாக்குமூலங்களின் பிரதிகள் தமக்கு வழங்கப்படவேண்டுமென பிரதிவாதிகள் தரப்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரியதையடுத்தே விசாரணை பிற்போடப்பட்டது. (ஒ-4-12)

---

### கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில்

## அரசு வாகன துஷ்பிரயோகம்; எதிரணி எம்.பி. விசாரணை!

கடந்த பொதுத் தேர்தல் சமயத்தில் சமூக அதிகார சபைக்குச் சொந்தமான வாகனங்களை துஷ்பிரயோகம் செய்தமை தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல ஜெயலத்கம நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முன்னாள் பிரதி அமைச்சர் டிலான் பெரேராவும் இதே குற்றச்சாட்டின்பேரில் புலனாய்வு அதிகாரிகளால் விசாரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் பிரசார காலத்தில் அரசுக்குச் சொந்தமான புல வாகனங்கள் காணாமற்போயிருந்தன. இவற்றில் அநேகமானவை அரசியல்வாதிகளால் எவ்வித அனுமதியுமின்றி தேர்தல் பிரசாரத்துக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தன.

இப்போது அது சம்பந்தமான விசாரணை தீவிரப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே பந்துல ஜெயலத்கம விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார். (ஒ-12)

---

## நாட்டைப் பாதுகாக்க யுத்தம் புரிவதில் தவறேதும் இல்லை

### பௌத்த பேராசிரியர் கூறுகிறார்

கொழும்பு,மே15

நாடு அழிக்கப்படும்போது - அதனைப் பிளவுபடுத்தும் முயற்சிகள் நடைபெறும்போது - அதற்கு எதிராகப் போராடுவதில் எந்தத் தவறும் இல்லை.

பௌத்த மதத்தில் இவ்வாறான போர் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

- இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் காலி பௌத்த பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒலிவர் அபேநாயக்க.

நேற்றுமுன்தினம் கொழும்பில் நடைபெற்ற தேசிய பிக்குமார் சம்மேளனத்தின் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டையும் மக்களையும் பாதுகாக்கும் கடப்பாடு அரசுக்கு உண்டு. ஒரு நாட்டுக்கு பலம்வாய்ந்த படை இருக்கவேண்டும். இதனை மறந்து பிரதமர் ரணில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் கேட்பதையெல்லாம் கொடுத்து நாட்டைப் பிரிக்க முற்படுகிறார்.

நாட்டைப் பாதுகாக்க பௌத்த இளைஞர், யுவதிகள் அனைவரும் இணைந்து போராடத் தயாராகவேண்டும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-4-12)

---

### பல்கலை வெளிவாரி துணைப்பாட பரீட்சை 22இல்

யாழ்.பல்கலைக்கழக வெளிவாரி கலைமுதற்தேர்வு மாணவர்களுக்கான (2000)அடிப்படைக் கணிதம் - துணைப்பாட பரீட்சை எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கலை முதற்தேர்வு மற்றும் வணிக முதற்தேர்வு மாணவர்களுக்கு இணைத்து நடத்தப்படும் இப்பரீட்சை வவுனியா வளாகத்திலும், யாழ்பல்கலைக்கழகத்திலும் இடம்பெறுமென்று வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு வட்டாரங்கள் தெரிவித்தன.(க-9)

---

### நாளை

வைகாசி 02
வியாழக்கிழமை
(16.05.2002)
திதி : சதுர்த்தி
பிற்பகல் 4.36 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 5.22 வரை.
சதுர்த்தி விரதம்
சுபநேரம் : 7.23 - 8.53
ராகுகாலம்: 1.23 - 2.53
(பழைய நேரப்படி)

---

### உதயவாக்கு

உன்னால் முடிந்தால் அடுத்தவர்களை விட புத்திசாலித்தனமாக நடந்துகொள். ஆனால் அதை சொல்லிக் கொண்டு திரியாதே.

---

## திருநகர்ப் பகுதியில் துப்புரவுப் பணி இல்லை

### பொதுமக்கள் விசனம்

குருநகர்,மே15

யாழ்.திருநகரிலுள்ள இராசசிங்கம் வீதியில் துப்புரவு வேலைகள் யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பகுதியால் பல காலமாக மேற்கொள்ளப்படவில்லை என இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வீதியின் இரு மருங்கிலும் புற்கள் வளர்ந்து காணப்படுவதுடன் வீதியின் பல இடங்களிலும் குப்பை கள் குவியல் குவியலாக காணப்படுகின்றன. அண்மையில் வீசிய பலத்த காற்றினால் முறிந்துவிழுந்த வாழைமரங்கள், முருங்கை மரங்களின் கொப்புகள் வீதியோரங்களில் குவிக்கப்பட்டுக் காணப்படுகின்றன.

யாழ்.மாநகரசபையின் சுத்திகரிப்புப் பகுதியினரால் இவை அப்புறப்படுத்தப்படவில்லை. குருநகர் கடற்கரை வீதி, இராணுவத்தால் போக்குவரத்துக்கு தடை செய்யப்பட்ட பகுதியாக உள்ளதனால் பாஷையூர் மக்களில் அநேகர் குருநகர் மற்றும் யாழ்.நகரை அண்டிய பகுதிகளுக்குச் செல்வதற்கு இவ்வீதியையே பயன்படுத்துகின்றனர்.

இப்பகுதியில் குடியிருக்கும் பலர் யாழ்.மாநகர சபையில் பணியாற்றுகின்ற நிலையில் இவ்வீதி கவனிப்பாரின்றி உள்ளது. (ஒ-51)

---

## ‘மக்கள் வங்கி’ கட்டட ஒப்பந்தம் குறித்து ஆராய அரசு தீர்மானம்

மக்கள் வங்கி, தனியார் நிறுவனம் ஒன்றுடன் இணைந்து 270 கோடி ரூபா செலவில் கோட்டையில் கட்டவிருந்த 40 மாடிகள் கொண்ட கட்டடம் பற்றிய ஒப்பந்தத்தை ஆராய்வதென அரசு தீர்மானித்திருக்கிறது.

இதற்கான நாடாளுமன்ற உப குழுவொன்றை அல்லது ஓய்வுபெற்ற நீதியரசர்கள் குழு ஒன்றை அரசு நியமிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1996ஆம் ஆண்டு மே மாதத்தில் கட்டட நிர்மாணத்துக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1997ஆம் ஆண்டில் கட்டம், கட்டமாக 12கோடியே 40 லட்சம் ரூபாவை வங்கி செலவிட்டிருக்கிறது.

இவ்வாறான ஒரு கட்டடத்தை நிறுவ வங்கிக்குப் பொருளாதார பலம் இல்லை என்பதால் அதை நிறுத்துவதென வங்கியின் பணிப்பாளர் சபை 1999ஆம் ஆண்டு மார்ச் மாதம் தீர்மானித்தது.

எவ்வாறாயினும், உத்தேசக் கட்டடத் திட்டத்தை ஹொங்கொங் நிறு வனம் ஒன்றிடம் கையளிக்க 2001 ஆம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டது. அதே ஆண்டு டிசெம்பர் 4ஆம் திகதி இதற்கான ஒப்பந்தமும் செய்யப்பட்டது.

இந்த ஒப்பந்தம் பயனற்ற ஒரு ஒப்பந்தம் என்று மக்கள் வங்கியின் தற்போதைய பணிப்பாளர் சபை தீர்மானித்திருக்கிறது. (ஒ)

---

## பெண்களை பூரணமடையச் செய்கிறது தென்னிந்திய திருச்சபையின் பயிற்சி

### சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம்,மே15

இன்று பலவிதத்திலும் துன்பங்கள் அனுபவித்துவரும் பெண்களுக்கு தென்னிந்தியத் திருச்சபை அளித்து வரும் பயிற்சிகள் அவர்களைப் பூரணமடையச் செய்கின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை தென்னிந்தியத் திருச்சபை ஆனைக்கோட்டை காந்திஜி கிராமத்தில் நடத்தும் தொழிற் பயிற்சி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலே பேராசிரியர் சபா ஜெயராசா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எம்மண்ணில் பல பெண்கள் சொல்லெணாத் துன்பங்களைப் பொருளாதார ரீதியில் அனுபவித்து வருகின்றார்கள். இதற்கு அவர்களிடம் ஒரு கைத்தொழில் இன்மையே காரணமாகும். இத்தகைய குறைபாட்டை நீக்கும் பணியில் தென்னிந்தியத் திருச்சபை ஈடுபட்டுவருகின்றது. இன்று பல பெண்களைச் சொந்த உழைப்பில் வாழவைத்த பெருமை தென்னிந்தியத் திருச்சபையையே சாரும்.

ஏனைய மாவட்டங்களில் பார்த்த பெண்களின் கைவேலைப்பாட்டைவிடச் சிறப்பான வேலைப்பாடுகளை இங்கு காணக்கூடியதாக உள்ளது - என்றார் அவர்.

அங்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பேராயர் கலாநிதி ஜெபநேசன் அடிகளார் தனது உரையில் -

தொழிலுக்காக மட்டுமன்றித் தெரிந்து வைத்திருப்பதற்காகவும் தொழிற்பயிற்சிகளை எவரும் அறிந்திருத்தல் நல்லதே என்றார்.

இங்கு வித்துவான் ஆ.கந்தையா, கிராம அலுவலர் வை. சுரேஷ், ஆசிரியர் அ.குமாரவடிவேல் ஆகியோரும் கலந்துகொண்டு உரையாற்றினர்.

பயிற்சி முடித்த 30 பேருக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க-12)

# அட! அப்படியா!!

தயாரிப்பு : கனிமொழி

## உலகம் காட்டும் கடிகாரம்

**இது!** சாதாரண கைக்கடிகாரம் இல்லை. உலகநாடுகளின் நேரங்கள் அனைத்தையும் ஒரே பார்வையில் பார்க்கக்கூடிய விசேட கடிகாரம். விலை உயர்ந்த பிளாட்டினத்தால் செய்யப்பட்டது இந்தக் கடிகாரம்.

1939ஆம் ஆண்டு ஜெனீவாவில் உள்ள நிறுவனம் ஒன்று இதனைத் தயாரித்தது. அண்மையில் இது ஏலத்தில் விற்கப்பட்டது. 40 லட்சம் டொலர்களுக்கு விலைபோனது. நம் நாட்டு மதிப்பில் சுமார் 35கோடி. வாங்கியவர் ஒரு ஆசிய நாட்டவர்.

இந்தமாதிரி கடிகாரங்களை இங்கே கொண்டுவந்து விற்கமாட்டேன் என்கிறார்களே என்று அங்கலாய்க்கிறார் கனடா, ஜேர்மனி, லண்டன், சுவிஸ் என்று தனது பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டு இங்கே இருக்கும் யாழ்ப்பாணத்துப் பெரியவர் ஒருவர்.



## தங்கத்தில் ஒரு குட்டிச் சைக்கிள்

**எல்லா**வற்றையும் குட்டி குட்டியாய் செய்வதுதான் இப்போதைய உலக 'ஸ்ரைல்'. மேற்குலகினர் இலத்திரனியல் பொருள்கள் எல்லாவற்றையும் குட்டியாக்குவதில் தீவிரம் காட்ட, விட்டேனா பார் என்று [illegible] இந்தக் குட்டிச் [illegible] குதித்து விட்டனர்.

தமிழகம் கோவையைச் சேர்ந்த டி.தங்கராஜ் என்பவர் 150 மில்லிகிராம் தங்கத்தில் ஒரு குட்டிச் சைக்கிளைச் செய்துள்ளார். இந்த சைக்கிளின் உயரமும் அகலமும் வெறும் கால் அங்குலம்தான்.



சாதாரண சைக்கிளில் இருப்பது போன்று இந்த குட்டிச் சைக்கிளிலும் சுழலக்கூடிய இரு சக்கரங்கள் அவற்றை இணைக்கும் பிரிவிலுடன் கூடிய செயின், பெடல், லைட், கரியர், சீற் என்று அனைத்து அம்சங்களும் உண்டு. பெடலைச் சுழற்றினால் சில்லுகள் சுற்றுகின்றன. ஹாண்டில் திரும்புகின்றது.

இதனைச் செய்ய தனக்கு 48 மணிநேரம் தேவைப்பட்டதாகத் தெரிவிக்கிறார் தங்கராஜ். இதனை



விட வெள்ளியில் ஒரு குட்டி தாஜ் மஹாலையும் அவர் உருவாக்கியுள்ளார்.

## எதையும் தாங்கும் குடைகள்



**மழை**யிலிருந்தும், வெயிலிலிருந்தும் நம்மைக் காக்க குடைகள் உதவுகின்றன. யாழ்ப்பாணத்தில் நாகரிகத்துக்காகவும் புதுக்குடை பிடிக்கின்றார்கள்.

இந்தக் குடையெல்லாம் எதிர்த்திசையில் பலத்த காற்று அடித்தால் வடிவம் மாறி 'டிஷ் அன்ரனாக்கள்' போலாகிவிடுகின்றன. சில சமயம் காற்று வேகமாக வீசினால் குடையோடு ஆளையும் இழுத்துக்கொண்டு போய்விடும்.

இதையெல்லாம் பார்த்துப் பரிதாபப்பட்ட பிரிட்டிஷ் நிறுவனம் ஒன்று புதிய குடைகளை வடிவமைத்துள்ளது. இந்தக் குடைகள் மிக வலிமையானவை.


உறுதியான கம்பிகள், பிரேம்கள் கொண்டு இந்தக் குடைகள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் இவை எந்த புயல் காற்றையும் தாங்கும் சக்தி படைத்தவை என்று தெரிவிக்கப்படுகின்றது. மணிக்கு 60 மைல் வேகத்தில் வீசும் காற்றைக் கூட இந்தக் குடை சமாளிக்குமாம். விலைதான் சற்று அதிகம் சுமார் 4 ஆயிரம் ரூபாய்.

## புத்தகக் கணனி

**கோ**யில்களில் புராணபடனம் படிப்பவர்கள் புராணப் புத்தகங்களை பக்குவமாக வைத்துப் படிக்கும் 'X' வடிவிலான நிறுத்தி போன்ற ஒன்று இதுவென்று நீங்கள் நினைத்தால் அது உங்கள் மகா தப்பு. உண்மையில் இலத்திரனியல் தொழில் நுட்பத்தின் ஓர் அதிநவீன வடிவம் இது.

தென்கொரியாவின் சம்சுங்(Sam sung) நிறுவனத்தின் புதிய மடிக்கும் வசதி கொண்ட கணனித் திரை(மொனிட்டர்) ஒன்றையே நீங்கள் படத்தில் காண்கிறீர்கள்.

இன்ரநெற் பாவனையாளர்களுக்கென்று இது வடிவமைக்கப்பட்டுள்ளது. இணையப் புத்தகங்கள் மற்றும் சஞ்சிகைகளை வாசிப்பதற்கு வசதியாக இந்தக் கணனித் திரை வடிவமைக்கப்பட்டுள்ளது.




நீங்கள் சாதாரண புத்தகங்களை இருபக்கமும் புரட்டிப் புரட்டிப் படிப்பது போன்று இதிலும் படிக்கலாம். ஆனால் பக்கங்களைப் புரட்ட முடியாது. அடுத்தடுத்து இரு பக்கங்கள் ஒரே சமயத்தில் வெளித்தெரியும். சாதாரண கணனித் திரையில் உங்களால் புத்தகம் அல்லது சஞ்சிகையின் ஒரு பக்கத்தை மட்டுமே ஒரு தடவையில் பார்க்க முடியும்.

வாசித்து முடித்தாயிற்றா? புத்தகத்தை மூடிவைப்பது போன்று இந்தக் கணனி யையும் மூடி வைத்துவிட்டுப் போய்விடலாம்.

அதற்கென்ன புராணங்களையும் விரிவாக இணையத் தளங்களில் போட்டுவிட்டால் எமக்கும் அவற்றை இந்தக் கணனி மூலம் படிக்க வசதியாக இருக்குமே என்கிறார் புராண படிக்கும் பெரியவர் ஒருவர். அவருக்கு புத்தகம் காவும் வேலை மிச்சமாம்.




உலகின் மிகப் பெரிய பூவான அமோபோபலஸ் ரைட்டானம் பிரிட்டிஷ் பூங்கா ஒன்றில் பூத்திருக்கின்றது. பார்ப்பதற்கு அழகாக இருக்கிறதே என்று அருகில செல்லநினைத்தீர்களானால் உங்கள் நிலை பரிதாபத்துக்குரியது. ஏனெனில் பூவிலிருந்து எழும் துர்நாற்றம் சகிக்க முடியாதது.

## நவீனத்தின் பெயரால்

**மே**ற்குலகில் எதையாவது கன்னாபின்னாவென்று செய்துவிட்டு அதற்கு நவீனம் என்ற ரீதியில் ஏதாவது ஒரு பெயர் வைப்பது வாடிக்கையாகிவிட்டது.

ஜேர்மனியைச் சேர்ந்த இளைஞர்குழு ஒன்று நவீன சாகசம் என்ற பெயரில் காட்சிகளை நடத்திவருகின்றது. அவர்கள் செய்வது எல்லாம் இதுதான்; தமது உடலில் உள்ள தோல் மற்றும் தசைப் பகுதிகளில் 'கிளிப்'புகளை மாட்டிக் கொண்டு இறப்பர் போன்று அவற்றை நீண்ட தூரத்துக்கு இழுத்துக்காட்டுகின்றார்கள்.



ஒரே நேரத்தில் கன்னம், கை, இடுப்பு, முதுகு பகுதி களில் உள்ள தோலில் 'கிளிப்' புகளை மாட்டிகள் கொண்டு தோலை இறப்பறாக இழுப்பதுதான் அவர்கள் செய்யும் சாகசம். என்ன அவஸ்தையடா இது!

# 'ஜீன்' சரியாக இருந்தால் பேச்சுச் சரியாக வரும்

**பேச்சுக்கு அடிப்படையான 'ஜீனின்' கண்டுபிடிப்புக் குறித்தும், குழந்தை பிறக்கும்போதே அதற்கு மொழி தெரிந்திருக்கும் என்பது குறித்தும் கடந்த வாரம் பார்த்தோம். அதன் தொடர்ச்சி இந்த வாரம் இடம்பெறுகிறது.**

மனித மூளை உருவாக்கியுள்ள எல்லா மொழிகளுக்கும் அடிப்படை இலக்கணம் ஒன்றுதான்.

அப்படி என்றால், ஒரு மொழி இன்னொரு மொழியில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது? அடிப்படை இலக்கணத்தில் வேறுபாடு இல்லை. மாறாக சில புறவேறுபாடுகளே உள்ளன. உதாரணமாகத் தமிழில் எந்த ஒரு பெயர்ச்சொல்லும் வேற்றுமை (Case) இல்லாமல் வராது. ஆங்கிலத்திலும் அப்படித்தான். தமிழில் வினைசொல் காலம் காட்டும். அதாவது நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம் என்பதைக் காட்டும். விகுதிகளைக் கொண்டிருக்கும். ஆங்கிலத்திலும் அப்படித்தான்.

அப்படி என்றால் தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபாடுதான் என்ன? தமிழில் வேற்றுமை பெயர்ச்சொல்லுக்குப் பின்னால் வரும். ஆங்கிலத்தில் பெயர்ச் சொல்லுக்கு முன்னால் Preposition ஆக வரும். அதாவது வேற்றுமை வரவேண்டும் என்பது இரண்டு மொழிகளுக்கும் பொதுவானது. ஆனால் வேற்றுமையைக் காட்டும் சொல் அல்லது விகுதி பெயர்ச்சொல்லுக்கு முன்னால் வருமா பின்னால் வருமா என்பதில்தான் இரண்டு மொழிக்கும் வேறுபாடு.

குழந்தை பிறக்கும்போது அதன மூளையில் இருக்கும் மொழி இலக்கணத்தில் வேற்றுமை இல்லாமல் பெயர்ச்சொல் வராது என்ற விதி இருக்கும். தமிழ்நாடு, ஆங்கிலநாடு இரண்டிலும் பிறக்கும் குழந்தைகளுக்கு பிறக்கும்போதே இந்த விதியும் இருக்கும். பிறந்த பிறகு தமிழ்க் குழந்தை என்ன கற்றுக்கொள்கிறது என்றால்



வேற்றுமையைக் காட்டும் விகுதி பெயர்ச் சொல்லுக்குப் பின்னால் வரும் என்பதைக் கற்றுக்கொள்கிறது. ஆங்கிலக் குழந்தை Preposition பெயர்ச் சொல்லுக்கு முன்னால் வரும் என்பதைக் கற்றுக்கொள்கிறது. இது புற இலக்கணம் என்று அழைக்கப்படுகிறது.

ஒரு மொழியில் மூளைக்குள்ளே தோன்றி வளர்கிற பொதுமை இலக்கணமும் உண்டு. குழந்தை பிறந்த பிறகு இந்த உலகில் அது கற்றுக் கொள்கிற புற இலக்கணமும் உண்டு. இரண்டும் சேர்ந்ததுதான் ஒரு மொழியில் இலக்கணமாக அமைகிறது.

குறைந்த காலகட்டத்தில் - சுமார் மூன்று வருடத்தில் - பிறந்த குழந்தையானது குறைந்த அனுபவத்தில் நிறைவாக தனது மொழியைக கற்றுக்கொள்கிறதே, அது எப்படி என்பதுதான் சாம்ஸ்கியின் ஆராய்ச்சி. அதற்கு காரணம் பிறக்கும்போது மொழி இலக்கணத்தின் அடிப்படை அறிவோடு குழந்தை பிறக்கிறது என்பதே இவரது முடிவு. இந்த முடிவுக்கு ஆதரவாகத்தான் இப்போது ஒக்ஸ்போர்டு ஆராய்ச்சியாளர்களின் கண்டு பிடிப்பு அமைந்துள்ளது.

இதில் இருந்து என்ன தெரிகிறது, குழந்தையின் மற்ற உறுப்புகள் எவ்வாறு அமையவேண்டும் எவ்வப்போது வளரவேண்டும் என்பதை ஜீன்கள் தீர்மானிப்பதுபோல, பேச்சு அல்லது மொழியும் எவ்வாறு அமைய வேண்டும், எப்போது வளரவேண்டும் என்பதை ஜீன்களே தீர்மானிக்கிறது. அதனால்தான் மூளையில் பிரச்சினை இல்லாமல் பிறக்கும் குழந்தைக்கு பேச்சு குறிப்பிட்ட கால கட்டத்தில் - பத்தாவது மாதத்தில் இருந்து தானாக வரும். மூளை பாதிக்கப்பட்ட குழந்தையாக இருந்தால் பிரச்சினைதான். பேச்சு சரிவரவராது.

மூளைக்கு செய்திகளைக் கொண்டுசெல்லும் காது பாதிக்கப்பட்டாலும் குழந்தைக்கு பேச்சுவருவது கஷ்டம். அதற்குக் காரணம், குழந்தை பிறக்கும்போதே மூளைக்குள் மொழியின் அடிப்படைப் பொது இலக்கணம் இருந்தாலும், புற இலக்கணத்தை மூளைக்குள் கொண்டு செல்ல குழந்தைக்கு காது கேட்கும் திறன் தேவை. அதனால்தான் செவிட்டுத் தன்மை உடைய குழந்தைக்கு மொழி கற்றுக்கொள்ள சிரமம் ஏற்படுகிறது.

அதுபோல மனவளர்ச்சி குன்றிய குழந்தைக்கும் மொழி வளர்வதில் பிரச்சினை உண்டு. அந்த குழந்தை தனது மூளையையும் காதுத் திறனையும் சரியாகப் பயன்படுத்தாது. அதனால் அதற்கு மொழி சரியாக வளர்வதில்லை. மூளை, காது இரண்டு உறுப்புகளும், மன வளர்ச்சியும் சரியாகக் குழந்தைகு இருந்தால் அதற்கு மொழி தானாக வரும். இல்லை என்றால் பிரச்சினைதான். அதுபோல வளர்ந்தவர்களுக்கு மூளையில் பாதிப்பு ஏற்பட்டால் அவர்களுக்கு ஏற்கனவே இருந்த மொழித் திறன் பாதிக்கப்படும்.

குறிப்பாக ஒருவருக்கு இடது பெரு மூளை பாதிக்கப்பட்டால், மொழி பாதிக்கப்படும். ஏனென்றால் மொழி அறிவு இடது பெரு மூளையில்தான் உள்ளது. இதில் ஏற்படுகின்ற பாதிப்பைப் பொறுத்து, பேசுவதிலோ அல்லது பிறர் பேசுவதைக் கேட்டு புரிந்துகொள்வதிலோ அல்லது எழுதுவதிலோ அல்லது வாசிப்பதிலோ பாதிப்பு ஏற்படும். இதை மொழி இழப்பு நோய்(Aphasia) என்று அழைப்பார்கள்.

இது பற்றி எல்லாம் சென்ற நூற்றாண்டிலேயே புரோகா(Broca), வெர்னிக் (Wernick) போன்ற விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உள்ளனர். மொழிக்கும் ஜீனுக்கும் உள்ள உறவு பற்றிய ஆராய்ச்சி மேலும் வளர வளர, ஜீன் மருத்துவம் மூலம் மொழி வராத குழந்தைக்கு எதிர் காலத்தில் சிகிச்சை அளிக்கும் வசதி ஏற்பட்டுவிடும்.

*நன்றி: 'தந்தி'*

# சியாராலியோனில் நேற்று வாக்களிப்பு

பிரீடவுண்,மே15

சியாராலியோனில் ஒரு தசாப்த கால உள்நாட்டுப் போரை நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரும் எண்ணத்துடன் அந்த நாட்டுமக்கள் நேற்று அதிபர் பதவி மற்றும் நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் வாக்களித்தனர்.

இத்தேர்தலில் தற்போதைய அதிபர் அஹமட்டேஜன் கபாபா மற்றும் முன்னாள் தீவிரவாதத் தலைவர்கள் ஆகியோர் வேட்பாளர்களாகப் போட்டியிடுகின்றனர்.

இத்தேர்தலையொட்டி ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், சியாராலியோன் மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் அமைதி மற்றும் சகிப்புத்தன்மை நோக்குடன் வாக்களிக்கும்படி கோரியுள்ளார்.



வாக்குப்பெட்டிகளைக் கொண்டுசெல்ல ஐ.நா. படை பாதுகாப்பு

உலகின் மிகப் பெரிய அமைதி காக்கும் நடவடிக்கையாக அங்கு 17ஆயிரத்து 500 ஐ.நா.அமைதி காப்புப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

சில நாள்களுக்கு முன்பாக தலைநகர் பிரீடவுணில் மூண்ட தேர்தல் வன்முறைகள் வாக்களிப்பு தினமான நேற்று முற்றாக கட்டுப்படுத்தப்பட்டதாக அமைதிப்படை கண்காணிப்பாளர் மேஜர் ஜெனரல் சையத அக்தார் அலி தெரிவித்தார். (ஒ)

## கொலம்பியாவில் பூமியதிர்ச்சி!

சன்ஜோஸ்,மே15

வட அமெரிக்க நாடான கொலம்பியாவை நேற்று பாரிய பூமியதிர்ச்சி உலுக்கியது.

5.2 ரிச்டர் அளவைக் கொண்ட இந்த பூமியதிர்ச்சியால் ஏற்பட்ட சேத விவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

தலைநகர் சன்ஜோஸ்ஸிலிருந்து 32 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கிங்ரோய் நகரில் பூமியதிர்ச்சி மையம்கொண்டிருந்தது.

சான்பிரான்ஸிஸ்கோ வளைகுடாவில் பூமியதிர்ச்சியை உணரமுடிந்ததாக அமெரிக்க புவியியல் ஆய்வு நிலையம் தெரிவித்தது. (ஒ)

## மேற்குக்கரையில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டனர்!

டெல்அவிவ்,மே15

இஸ்ரேலியப் படையினர் நேற்று மேற்குக்கரைப் பகுதியில் நடத்திய தாக்குதலில் இரண்டு பலஸ்தீன உளவுப் படைப்பிரிவு அதிகாரிகள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இத்தாக்குதல் நடவடிக்கையின் போது 14 பலஸ்தீனத் தீவிரவாதிகளைத் தாம் கைது செய்திருப்பதாக இஸ்ரேலிய இராணுவம் தெரிவித்தது. (ஒ)

# இந்திய ராணுவ முகாம் மீது தீவிரவாதிகள் தாக்குதல்!

## சிறுவர், பெண்கள் உட்பட 30 பேர் பலி!!

ஸ்ரீநகர்,மே15

இந்தியக் கட்டுப்பாட்டுக் காஷ்மீரில் இராணுவ முகாம் ஒன்றின் மீது நேற்றுத் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சிறுவர் மற்றும் பெண்கள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர். அமெரிக்க அரசின் உதவி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

கோடைகால மாநிலத் தலைநகர் ஸ்ரீநகரில் இருந்து 10 கிலோமீற்றர் தொலைவில் கலுசக் என்ற இடத்தில் உள்ள இராணுவ முகாமே தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

நேற்றுக்காலை பயணிகள் பேருந்தில் இராணுவச் சீருடையுடன் பயணித்த மூன்று தீவிரவாதிகள் இராணுவமுகாம் வாசலில் பஸ்ஸில் இருந்து இறங்கி கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் -

அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த இந்தியப் படையினர் எதிர்த்தாக்குதல் நடத்தியதாகவும் -

அப்போது அச்சத்தால் பஸ்ஸிலிருந்து இறங்கி ஓடிய பொதுமக்கள் சிலர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

அதன்பின்னர் தீவிரவாதிகள் முகாமுக்குள் பிரவேசித்து படையினர் குடியிருப்பை நோக்கிச் சுட்டதில் இராணுவத்தினர் மற்றும் அவர்களது குடும்பங்களைச் சேர்ந்த சிலர் உயிரிழந்தனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்கள் இடம்பெற்ற இந்தத் தாக்குதல் சம்பவத்தின் இறுதியில் 3 தீவிரவாதிகளும் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதற்கிடையில் - இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பனிப்போரை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் கிறிஸ்டினா றொக்கா நேற்று இந்தியாவுக்கு விஜயம் செய்தார். இந்தச் சமயத்தில் இடம்பெற்றுள்ள இத்தாக்குதல் சம்பவம் கிறிஸ்டினா றொக்காவின் முயற்சியை மேலும் கடுமையாக்கும் என்று கருதப்படுகிறது.



சம்பவ இடத்தில் இருந்து வெளியேறும் மக்கள்

இதேசமயம் -

ஆக்ரா அருகே இந்திய அமெரிக்க கூட்டுப்படைகள் போர் ஒத்திகையில் ஈடுபட்டுவருகின்றன. ஆனால் இந்தப் போர் ஒத்திகை குறித்த விவரங்கள் மிகவும் இரகசியமாகப் பேணப்படுகின்றன. (ஒ)

# ஈராக் அதிபரை பதவி கவிழ்க்க ஜேர்மனியில் இரகசியக் கூட்டம்

வாஷிங்ரன்,மே15

ஈராக் அதிபர் சதாம் ஹூசைனை பதவியிலிருந்து அகற்றுவது தொடர்பாக அமெரிக்க அதிகாரிகளின் ஏற்பாட்டில் ஜேர்மனியில் இரகசியக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்கப் பத்திரிகைகள் இத்தகவலை அம்பலப்படுத்தியுள்ளன.

ஜேர்மனியில் இடம்பெற்ற இரகசியக் கூட்டத்தில் ஈராக்கிய எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகளும், அமெரிக்கா உட்பட சதாம் மீது அதிருப்தி கொண்ட சில நாடுகளின் உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஈராக்கில் சதாம் ஹுசேனுக்கு எதிராகச் செயற்படும் குர்திஷ் கட்சியின் மூத்த தலைவர்கள் இருவரும் இரகசியக் கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். சதாமுக்கு எதிரான கிளர்ச்சிகளுக்கோ அல்லது அவரைப் பதவியகற்றவோ தேவைப்படும் ஆயுதம் மற்றும் ராஜதந்திர உதவிகளை ஈராக்கிய எதிர்க்கட்சிகளுக்கு வழங்குவது தொடர்பாக கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன.

அத்துடன் சர்வதேச ரீதியில் சதாமுக்கு எதிரான பிரசாரங்களை முடுக்கி விடுவது சம்பந்தமாகவும் அதில் பேசப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. (ஒ)

# சமாதானத்தை நிலைநிறுத்தும் முயற்சியில் வர்த்தக சமூகத்தினரின் முன்மாதிரி

இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிகளில் வர்த்தக சமூகத்தினர் முன்னெப்போதும் இருந்திராத வகையில் தற்போது அதிக ஈடுபாடு காட்டிவருகின்றனர்.



தலைநகரில் செலிங்கோ கட்டடம்

நாட்டின் பொருளாதாரத்தில் மட்டுமன்றி அரசியலிலும் சக்திமிக்கவர்கள் என்பதை வர்த்தகர்கள் நிரூபித்து வருகின்றனர். வர்த்தக நோக்கங்களுக்கு அப்பால் - லாப, நட்டங்களுக்கு அப்பால் - நாட்டில் 'சமாதானம்' மிக அவசியம் என்பதை தென்னிலங்கை வர்த்தக சமூகம் உணரத் தலைப்பட்டிருப்பது ஓர் ஆரோக்கியமான திருப்பமாகும்.

வர்த்தக சமூகத்தின் சமாதான முயற்சிகளுக்கு தென்னிலங்கையில் ஒரு தலைமைத்துவத்தைக் கொடுத்திருப்பவர் செலிங்கோ கூட்டு நிறுவனங்களின் தலைவரும் நாடறிந்த வர்த்தகப் பிரமுகருமாகிய தேசமான்ய லலித் கொத்தலாவல.

வர்த்தகத்துறையில் கோலோச்சிய கொத்தலாவல, நீண்டகாலமாகவே சமாதானத்துக்காக குரல் கொடுத்து வருகின்றார். வர்த்தக அமைப்புகளை அணிதிரட்டி பலம்வாய்ந்த ஒரு சமாதானத்துக்கான அமைப்பை உருவாக்கி அதற்குத் தலைமை வகித்து வருகிறார்.

லலித் கொத்தலாவலவின் சமாதானத்துக்கான - இன ஐக்கியத்துக்கான - முயற்சிகள் இந்த நாட்டை தீயில் பொசுக்கிவந்த இனநெருக்கடிக்கு சமாதான வழியிலான தீர்வு ஒன்றைக் காண்பதற்கு ஆட்சியாளர்களை ஊக்கப்படுத்தியிருக்கிறது.

போர்ச் சூழ்நிலைக்கு மத்தியில் அதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி வர்த்தகத்தை நிலைநிறுத்திய நிலைமாறி சமாதானத்தை நிலைநிறுத்தும் பணியில் வர்த்தக கூட்டமைப்பு இறங்கியிருக்கிறது.

சமாதானத்துக்காக குரல்கொடுத்து வந்த அதேவேளை இன, மத, வாக்க வேறுபாடு இன்றி நலிவுற்றவர்களுக்கு கைகொடுக்கும் மனிதாபிமானப் பணிகளையும் தேசமான்ய லலித் கொத்தலாவல முன்னெடுத்து வந்திருக்கின்றார்.

தனது வர்த்தக நடவடிக்கைகளை போரின் மையப் பகுதியான யாழ். குடாநாட்டுக்கு விஸ்தரிக்கும் முயற்சியில் அவர் இப்போது ஈடுபட்டிருக்கிறார்.

இன ஐக்கியத்துக்கான பாலமாக, குருநகரில் வசிக்கும் 75 வறிய குடும்



கொத்தலாவல தம்பதிகள்

பங்களுக்கு சுயதொழில ஊக்குவிப்பு கடன் உதவிகள் இவ்வாறு வழங்கப்படவுள்ளன.

மேலும் பல மனிதாபிமான உதவித் திட்டங்களை இங்கு செயற்படுத்த லலித் கொத்தலாவல ஆர்வமாக உள்ளார்.

'தேசமான்ய' லலித் கொத்தலாவலவின் சமாதானப் பயணம் தென்னிலங்கையின் சமாதான விரோத சக்திகளின் கண்டனத்துக்கு இலக்காகி இருக்கின்றது.

இன ஐக்கியத்தை ஏற்படுத்தும் முயற்சிகளால் சிங்களப் பேரினவாதிகளின் சீற்றத்துக்குள்ளாகி இருக்கிறார் லலித் கொத்தலாவல.

'சிறிலங்கா பெஸ்ட்' (Srilanka First) என்ற மகுட வாக்கியத்தின் மூலம் இன ஐக்கியத்துக்கு சமாதானத்தின் அவசியத்தை நாடளாவிய ரீதியில் பிரசாரம் செய்யும் பணி முன்னெடுக்கப்பட்டுவருகிறது.

சமாதானத்துக்கான மனிதசங்கிலி இயக்கம் தேசமான்ய லலித் கொத்தலாவலவின் சமாதானப் பணிகளில் குறிப்பிடத்தக்கது.

'தேசமான்ய லலித் கொத்தலாவல' என்னும் பெயரில் வெளியிடப்பட்ட ஓர் ஆங்கிலத் தொகுப்பு நூலில் ஓர் இடத்தில் அவரைப்பற்றி பின்வருமாறு கூறப்பட்டிருக்கிறது.

'ஒரு மனிதன் முழுமையானவன் என்பது அவன் சம்பந்தப்பட்ட சில சிறந்த சந்தர்ப்பங்கள் மூலம்தான் அறிய முடியும். இந்த அடிப்படை உண்மையை வைத்துக்கொண்டு லலித் கொத்தலாவல எந்த அளவில் முழுமையானவர், அவரிடத்திலே காணப்படுகின்ற குறைபாடுகள் என்ன என்று பார்க்குமிடத்து, அவரது கொள்கைகள் ஒரு மனிதனுக்கு பேச்சுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் இருக்கவேணடும் என்பதையே வலியுறுத்துகின்றன. அந்தவகையில் அவர் மற்றவர்களிடத்திலே மிகுந்த இரக்கமுடையவர் பெருந்தன்மையானவர். இவர் தன்னைப் போலவே மற்றவர்களிடமும் எதிர்பார்க்கின்றார். இதனால் இவரோடு பழகுபவர்கள் சிலரால் நிந்திக்கப்பட்டும் வருகிறார். அதேநேரம் சிலரால் ஏமாற்றப்படக் கூடியவருமாகின்றார். அதனால் இவர் வாழ்க்கையில் மிக விழிப்புடன் இருக்கவேண்டும்' என புத்திமதி கூறியுள்ளார்கள்.



தேசமான்ய லலித் கொத்தலாவல

"...இவரது குறைபாடுகள் பற்றிக் கூறுவதானால், இவர் சில சந்தர்ப்பங்களில் திடீரென உணர்ச்சிவசப்படுவர். அதனால் திடீரெனவே அமைதி

(13ஆம் பக்கம் பார்க்க)




ஜனநாயகத்துக்கான மனிதச் சங்கிலிப் போராட்டத்தில் வர்த்தகர்கள்....

# இன்று யாழ்ப்பாணத்தில் சரித்திரம் படைககும்

# செலிங்கோ கூட்டு நிறுவனங்கள்

# CEYLINCO CONSOLIDATED

CEYLINCO CONSOLIDATED



"There is something unique about Sri Lankans. Something very good. They are kind, intelligent, courageous and have a sense of humour.

For so many years, everything bad about you have been told to the world and to yourselves by first our Colonial Masters and now by the Leaders who never encouraged you to give of your best.

You can easily be amongst the best in the World, if you can believe in yourselves."

*Deshamanya Lalith Kotelawala.*

## இலக்கம் 173, ஸ்ரான்லி வீதியில்...

**The Finance Co Ltd**

உடன் இணைந்து

**Ceylinco Insurance Co Ltd(General)**

**F & G Property Developers (pvt) Ltd**

**Ceylinco Grameen Credit Co Ltd**

செயற்பட உள்ளன 15-05-2002

(C/22124)

# அரசமைப்பை அடிக்கடி திருத்துவது நாட்டின் நலனுக்கு உகந்ததல்ல!

**ஜனாதிபதியிடம் குவிந்துள்ள அதிகாரங்களை ஒழிப்பது - மட்டுப்படுத்துவது நாட்டுக்கும் அரசுக்கும மிகவும் தேவையான விடயமாகும். ஆனால், அரசமைப்பிற்கான திருத்தங்களை மேற்கொள்ள முயற்சித்து அதையே கேலிக்கூத்தாக்கக் கூடாது. இது குறித்து ஆராயும் இக்கட்டுரை "ராவய" வார இதழில் வெளியான அரசியல் விமர்சனமாகும். அதன் தமிழாக்கத்தை இங்கு தருகின்றோம்.**

கடந்த பொதுத் தேர்தலின்போது இந்நாட்டு மக்கள் ஐ.தே.முன்னணியை ஆட்சி செலுத்தத் தேர்ந்தெடுத்தாலும் அரசமைப்பு ரீதியாக நோக்குகையில் இன்னும் ஆட்சி அதிகாரம் பொ.ஐ. முன்னனரியின் தலைவியான ஜனாதிபதியின் கையிலேயே உள்ளதை அவதானிக்க முடிகிறது.

அரச திணைக்களங்களிலும் அமைச்சுகளிலும் முக்கிய பதவிகளை வகிக்கும் சிலரை நீக்கிவிட்டு அவர்களது இடத்திற்கு வேறு சிலரை நியமிக்கவேண்டிய தேவை பிரதமருக்கு உள்ளது. ஆனால் இது தொடர்பாக ஜனாதிபதியிடம் உடன்பாடு காணப்படாத சூழ்நிலையில் அந்த நியமனங்களை அரசு மேற்கொள்ள முடியாத நிலைமையில் உள்ளது.

நாடாளுமன்றத்தின் ஆயுள்காலம் ஓராண்டு முடிவடைந்ததுடன் விரும்பினால் அல்லது தேவை ஏற்படின் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. இதுவே அரசு எதிர்நோக்கும் மிகப் பெரிய அச்சுறுத்தலாகும். இதைவிட நாடாளுமன்றத்தின் கூட்டத்தொடரை எழுந்தமானத்திற்கு ஒத்திவைக்கும் அதிகாரமும் ஜனாதிபதியிடம் உள்ளது.

வடககு - கிழக்குப் பிரதேசத்திற்கு இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளபோதிலும் அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய இடைக்கால நிர்வாக சபைக்கு உறுப்பினர்களை நியமனம் செய்யும்போது தேவை ஏற்படின் ஜனாதிபதியால் அதைக் குழப்பியடிக்கமுடியும்.

தற்போது ஆட்சியில் உள்ள அரசிற்குக் கிடைத்துள்ள பெரும்பான்மைக்குப் பொருந்தாத விதத்தில் அரசமைப்பு அமைந்துள்ளது. அதாவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு தான் விரும்பிய விதத்தில் நாட்டை நிர்வகிக்க முடியாத விதத்தில் அரசியல் அமைப்பு அமைந்துள்ளது. நாடாளுமன்ற அதிகாரமும் ஜனாதிபதி பதவியும் ஒரே கட்சியிடம் இருக்கும் என்ற எண்ணத்திலேயே இந்த அரசமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது இந்த அதிகாரங்கள் இரண்டும் ஒரே கட்சியிடம் இல்லை; இரு வேறு கட்சியிடம் உள்ளன.



இந்த அரசமைப்பினால் என்றோ ஒருநாள் பிரச்சினைகள் உருவாகும் என கலாநிதி என்.எம்.பெரேரா 1978 இல் எடுத்துக்கூறிய போதிலும் இது வரை எவரும் அக்கறை காட்டியதாகத் தெரியவில்லை. கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனநாயகத்துக்கான கூட்டமைப்பு அரசமைப்பிலுள்ள ஒன்றுக்கொன்று முரணான நிலைவரம் குறித்து எடுத்துக்கூறியது. மேலும் தேர்தலுக்கு முன்னர் இந்த நிலைமையை மாற்ற வேணடும் என அரசியல் கட்சிகளிடம் அநத அமைப்பு கோரிக்கையும் விடுத் தது. இருப்பினும் நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் இந்த விடயத்தில் அதிக அக்கறை செலுத்தவில்லை.

ஜனாதிபதியின் அதிகாரம் ஒரு கட்சியிடமும் நாடாளுமன்ற அதிகாரம் பிறிதொரு கட்சியிடமும் இருக்கும் நிலைமையானது ஶ்ரீலங்காவைப் பொறுத்தவரை புதியதோர் அனுபவமாகும். இதனால் உருவாகியுள்ள ஒன்றுக்கொன்று முரண்பட்ட நிலைமையை ஜனாதிபதி நேரகாலத்துடன் உணர்ந்து ஒன்றில் சுயவிருப்பத்தின் பெயரில் தனது பதவியைக் கைவிட்டுச் சென்றிருக்க வேண்டும்; இல்லையேல் சகஜ வாழ்க்கையை மேற்கொள்வதற்குத் தேவையான அரசியல் அமைப்புத் திருத்தங்களை மேற்கொள்ளுமாறு கோரியிருக்க வேண்டும். ஜனாதிபதி அவ்வாறு மேற்கொண்டிருந்தால் நிலைமைகள் மோசமடையாமல் தடுப்பதற்கு வாய்ப்புக்கள் இருந்தன.

சுமுகமான நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜனாதிபதிக்கு வாய்ப்புக்கள் இருந்தபோதிலும் அதைப் பயன்படுத்தாது அதற்குப் பதிலாக தனக்கு வழங்கப்பட்டிருந்த வரையறையற்ற அதிகாரங்களை தேவையற்ற விதத்தில் பயன்படுத்த ஜனாதிபதி முனைந்துள்ளார். எனவே அரசின் செயற்பாடுகளைப் பாதுகாப்பதாயின் ஜனாதிபதியைப் பதவியிலிருந்து விரட்ட வேண்டும். அல்லது அவரிடமுள்ள வரையறையற்ற அதிகாரங்களை மட்டுப்படுத்த வேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒரு நடவடிக்கையை மேற்கொண்டேயாக வேண்டும் என்ற நிலைமைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

எனவேதான் அரசு புதிய அரசமைப்புத் திருத்தங்கள் குறித்து தற்போது ஆராய்ந்து வருகிறது. எழுந்தமானத்திற்கு நாடாளுமன்றத்தைக் கலைக்க நிறைவேற்று ஜனாதிபதியிடமுள்ள அதிகாரத்தை ஒழிப்பது மற்றும் அரசின் செயற்பாடுகளுக்கு தடைக்கற்களாக உள்ள ஏனைய அதிகாரங்களை ஒழிப்பது அல்லது மட்டுப்படுத்துவது ஆகியனவே அந்தத் திருத்தங்களில் அடங்கியுள்ளன எனத் தெரிகிறது. ஆனால் அரசமைப்புக்கான இந்தத் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமாயின் அரசிற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவை. அரசிற்கோ நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இல்லை. எனவே அரசாங்கம் தேவைப்படும் மேலதிகப் பெரும்பான்மையை பொ.ஐ.முன்னணியில் இருந்து பெற முயற்சிக்கிறது. புதிய தந்திரங்களைக் கையாணடு பொ.ஐ.முன்னணியில உள்ள அரசுக்கு ஆதரவான நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தோஷப் படுததுவதற்கு பல்வேறு நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள நேர்ந்துள்ளது.

மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்குத் தேவைப்படும் மேலதிக பெரும்பான்மையை (உறுப்பினர்களை) பொ.ஐ.முன்னணியில் இருந்து அரசால பெறமுடியுமாயின் பொ.ஐ.முன்னணிக்குள் பிளவுகள் ஏற்படககூடும். வாத, விவாதங்கள் ஏற்படலாம். அந்த வாத, விவாதங்கள் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையில் முடிவு பெறலாம்.

தற்போது ஜனாதிபதி மிகவும் பலமான நிலையில் இல்லை. மிகவும் பலவீனமான ஒரு நிலையிலேயே உள்ளார். நாடாளுமன்றத் தேர்தலில் தனது கட்சி தோல்வியைத் தழுவியதும் ஜனாதிபதி ஒரு முடிவிற்கு



வந்தார். அதாவது ஒரு சில மாதங்களுக்கு எப்படியாவது தாக்குப்பிடிப்பதில் வெற்றிபெற்றால்தான் மேலும் வலுவான நிலையைப் பெறலாம் எனவும் அதேநேரம் அரசு பலவீனமடைந்துவிடும் எனவும் ஜனாதிபதி கற்பனை செய்தார். ஆனால், ஜனாதிபதி நினைத்தவாறு நடைபெறவில்லை.

**தமிழில்: கஜனி**

அரசு வலுவான நிலையை அடைந்தது. அதேநேரம் ஜனாதிபதி பலவீனமான நிலையை அடைந்தார்.

நாட்டின் எதிர்காலம் தொடர்பாக இன்று உருவாகியுள்ள விசேடமான சூழ்நிலையில் ஜனாதிபதி தோற்கடிககப்படவேண்டும் என்பதில் இருவேறு கருததுக்கள் இருக்கமுடியா. அதுமாத திரமன்றி ஜனாதிபதியின் ஆட்சிக் காலத்தில் ஜனாதிபதியின் ஒப்புதலுடன் - ஆசீர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்ட பயங்கரமான குற்றச் சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதியை நீதியின் முன் நிறுத்துவது பொருத்தமான நடவடிககையாகும்.

இருப்பினும் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எடுக்கப்படும் முயற்சிகள் எதிர்க்கட்சிகளின் திட்டங்களைப் பலவீனப்படுத்துவனவாகவும் அதேநேரம் அரசியல் அமைப்புத் திருத்த முயற்சிகளைக் குழப்பியடிப்பனவாகவும் அமையக் கூடும்.

மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற அரசு பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒத்துழைப்பைப் பெறவேண்டியுள்ளது. அதேநேரம் ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும் நோக்கில் அதை முக்கிய விடயமாகக் கருதி செயற்பட வேண்டிய கட்டாயமும் அரசுக்கு உள்ளது. இந்த ஒட்டுமொத்த நடவடிக்கைகள் எதிர்க்கட்சியைப் பலவீனப்படுத்தலாம். அதேநேரம் அரசமைப்பையும் குளறுபடியாக்க லாம். இந்த நடவடிக்கைகள் மூலம் எதிர்க்கட்சிக்கும் அரசமைப்பிற்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் கவனத்தில் கொண்டு செயலில் இறங்காவிடின் - ஜனாதிபதியிடமுள்ள அளப்பரிய அதிகாரங்களை அவரிடம் தொடர்ந்து விட்டுவைப்பின் இந்த நாட்டிற்கு பெரு நாசமே விளையும்.

ஜனாதிபதியின் அதிகாரங்களைப பறிப்பது மிகவும் தேவையான ஒன்றாயினும் அதனால் எழக்கூடிய சர்ச்சைகளுக்கு எவ்வாறு முகங்கொடுக்கலாம் - எவ்வாறு அவற்றை நிவர்த்தி செய்யலாம் என்பது குறித்து தற்போதே கவனம் செலுத்தவேண்டும்.

குறிப்பாக அரசமைப்பானது நீண்டகால நோக்குடன் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். தேவை ஏற்படும் போதெல்லாம் பிரச்சினைகளுக்கு தற்காலிக தீர்வுகளைக் காண அரசமைப்பு உருவாக்கப்படவில்லை.

தற்போதுள்ள பிரச்சினை அரசியல அமைப்பு தொடர்பானது என்பதால் அதை அரசமைப்பு ரீதியாகவே வெற்றிகொள்ளவேண்டும். இருப்பினும் அதற்கான வாக்குகளைத் தேடும் நடவடிக்கை மேற்கொள்ளும்போது ஒரு சிலரைத் தற்காலிக சந்தோஷங்களுக்கு உள்ளாக்க நேரிடும். தற்காலிக தேவைகளுக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகளே அரசமைப்பைக் கேலிக்குகூத்தாக்கவும் கூடும்.

நாடாளுமன்றத்தைக் கலைக்க ஜனாதிபதிக்குள்ள வாய்ப்பு மற்றும் அரசாங்கத்தின் செயற்பாடுகளின் தேவையற்ற விதத்தில் தலையிடுவது ஆகியவற்றை ஒழித்து - அதற்குமேல செல்லாமல் - நாட்டின் நிகழ்கால மற்றும் எதிர்காலத் தேவைகளைக் கவனத்தில் கொண்டு - நாட்டிற்குப் பொருத்தமான அரசமைப்பை உருவாக்க பரந்த அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டு - அந்த நடவடிக்கைகளின் ஊடாக பொது இணக்கப்பாட்டுடன் கூடிய புதிய அரசமைப்பை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொள்ளமுடியுமாயின் குளறுபடிகள் எவையுமின்றி தேவைப்படும் நோக்கத்தை அடைவதில் வெற்றிபெறலாம்.


## தமிழீழ வைப்பக அறிவித்தல்

அன்புக்குரிய வழமையாளர்களே,

- 1996.04.19ஆம் நாளுக்கு முன்னர் தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் நகையடைவுக்கடன் பெற்று இன்றுவரை அவற்றை மீட்காதவர்கள் தங்கள் அடைவு நகைகளை, முற்பணத்தொகையினையும் 1996.04.19ஆம் நாள் வரைக்குமான வட்டித் தொகையினையும் மட்டும் செலுத்தி மீளப்பெற்றுக் கொள்ளுதல்.
- தமிழீழ வைப்பகத்தின் யாழ்ப்பாணம், நெல்லியடிக் கிளைகளில் உள்ள தங்கள் வைப்பகக் கணக்குகளை 1996.04.19ஆம் நாளுக்குப் பின்னர் செயற்படுத்தாதவர்கள் கணக்குகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- தமிழீழ வைப்பகப் பணிபற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

ஆகிய நோக்கங்களுக்காகப் பொற்பதி வீதி, கொக்குவிலில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் ஏழல்தோறும் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை வைப்பக அலுவலரைத் தொடர்பு கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

மேலாளர்,
(ஆளுகை)
நடுவப் பணியகம், தமிழீழ வைப்பகம்.

(C/22051)

தமிழீழ வைப்பகம்
BANK OF TAMILEELAM

தமிழீழ வைப்பகம் தமிழரின் காப்பகம்



**Ceylinco Global Services (Pvt) Ltd.**

இன்று 15-05-2002முதல்
யாழ்நகரிலும்
எமது சேவைகள்

- Singapore Parkway Medical Referral Center உடன் இணைந்து தரமான நவீன வைத்திய சேவைகள்.
- வெளிநாட்டுக் கல்வி வாய்ப்புகள்

560, 562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/22118)




HOLMES POLLARD & STOTT

ஓர் ஆலமரம் தனது பலத்தினை அதன் வேர்களிலிருந்தே பெற்றுக்கொள் கின்றது, அது தனது வேர்களை எங்கு பதித்து எவ்வாறான சூழலில் வளர்கின்றதோ அது விருட்ஷமானதும் அச் சூழலில் உள்ளவர்களுக்கு ஒரு நிழலாகவும் பாதுகாப்பான ஓர் புகலிடமாகவும் அமைகின்றது.

அவ்வாறாகவே நாமும் எமது பலத்தினை எங்கெல்லாம் வேர் ஊன்றுகின்றோமோ அங்கெல்லாம் இருந்து பெற்றுக்கொண்டு எமது சேவையை அங்கிருக்கும் மக்களுக்கு ஆற்றிவருகின்றோம்.

எமது 91வது செலான் வங்கிக்கிளை இன்று யாழ்.மண்ணில் கோலாகல மாக திறந்து வைக்கப்படுகின்றது.

SEYLAN BANK LIMITED
செலான் வங்கி

560, 562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 021-3047

(C?22097)

## ஞானவைரவர் கோயில்
## திருப்பணி வேலைகள்

வண். மேற்கு பி. ஏ. தம்பிலேன் ஞானவைரவர் கோயில் கும்பாபிஷேகத்தினை முன்னிட்டு அமைக்கப்பட்ட திருப்பணிச் சபை கலைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் திருப்பணிகள் யாவும் இனிமேல் கோயிலின் தேவஸ்தானத்தினால் மட்டுமே மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றோம்.

இ.குமாரசாமி சர்மா
இ.சந்தானகோபாலசர்மா.

(3728)



## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக் கட்டுரைகள் பல்கலைக்கழக நடைமுறைகளுக்கமையக் கட்டிக் கொடுக்கப்படும். இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/=

**பாரதி பதிப்பகம்**

*430, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.* T.P.3081

(C/21066)


# புலிகளின் அலுவலகம் திறப்பு

மட்டக்களப்பு,மே15

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளின் மூன்றாவது அலுவலகம் ஆரையம்பதி கிரான்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் துரை இந்த அலுவலகத்தைத் திறந்து வைத்தார். (ஐ-4-12)


## யாழ்.மண்ணில் எமது சேவையை ஆரம்பிக்கும் நன்னாளில் எமது காரியாலயத்திற்கு அனைவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

CTT

## சிலிங்கோ ட்ரவல்ஸ் அன் டுவர்ஸ்......

நாங்கள் உங்களுக்கு வழங்கும் சேவைகளாவன.......

- கனடா, லண்டன், பரிஸ், ஜேர்மனி, மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகள், பாங்கொக், மும்பாய், சென்னை, திருச்சி மற்றும் ஏனைய நகரங்களுக்கும் விமான பிரயாண டிக்கட் வசதிகளைச் செய்துகொடுத்தல்.
- ஹோட்டல் தங்குமிட வசதிகள் செய்து கொடுத்தல்.
- வெளிநாட்டு பிரயாணங்களுக்கான காப்புறுதி வழங்கல்.
- உங்கள் குடும்பத்துடனோ, குழுக்களாகவோ வெளிநாடுகளில் உள்ள கிறிஸ்தவ, இந்து, முஸ்லிம் திருத்தலங்களுக்கும் மற்றும் உல்லாச தலங்களுக்கும் விடுமுறையைக் கழிக்க சென்றுவர வசதிகள் செய்து கொடுத்தல்.

*தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:*

## சிலிங்கோ, ட்ரவல்ஸ் அன் டுவர்ஸ்

**செலான் வங்கி கட்டடம், 560,562, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

தொலைபேசி எண்: 021-3047

தலைமைக் காரியாலயம்,
**சிலிங்கோ கட்டடம், 69, இரண்டாம் மாடி, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு ~ 01, தொ.பே. ~ 074 729 724, 729 729**

E மெயில் - tours.@ceylinco.lk, tour sales@ctt.ceylinco.lk

இணையக் காரியாலயங்களாவன.......

| | |
|---|---|
| மிலேனியம் செலான் கோபுரம் | - 90, காலி வீதி, கொழும்பு - 03. தொ.பே. - 074-716123 |
| செலான் வர்த்த வங்கி | - லான்ட்மார்க் கட்டடம், கொழும்பு - 03. தொ.பே. - 075-557718/9 |
| வவுனியா | - செலான் வங்கி, 222, கண்டி வீதி, வவுனியா. தொ.பே. - 024-23335 |
| காலி | - செலான் வங்கி, 34, முதலாம் குறுக்குத் தெரு, தல்பொட்டவுன், காலி. தொ.பே. - 074-384349 |
| நீர்கொழும்பு | - செலான் வங்கி, 141, ராஜபக்ச அகல வீதி, நீர்கொழும்பு. தொ.பே. - 031-33438 |
| கண்டி | - செலான் வங்கி, 65, கிங்ஸ் வீதி, கண்டி. தொ.பே. - 08-233762/233832 |
| கம்பஹா | - செலான் வங்கி, 1, பௌத்தலோக மாவத்தை, கம்பஹா. தொ.பே. - 033-30717/30869 |
| குருநாகல் | - செலான் வங்கி, 54, கொழும்பு வீதி, குருநாகல். தொ.பே. - 074-692407/692427 |

(சி-22098)



## இளமை மற்றும் அழகின் ரகசியம்




விஞ்ஞான சான்று பெற்றது. பக்க விளைவுகள் இல்லை.

தினம் இரண்டே கேப்ஸுயூல்கள்

## பயோட்டின் - H 250

உங்கள் கூந்தல், சருமம் மற்றும் நகங்களின் ஊட்டத்திற்கு...

மேலும்

1. தலைமுடி உதிர்தல், இளநரை, மெல்லிய உடையக்கூடிய முடி
2. சரும நோய், தோல் சுருங்கி வயதான தோற்றம், காய்ந்த சருமம்
3. சீரற்ற உடையக்கூடிய நகம்

போன்றவற்றிலிருந்து முற்றாக நிவாரணம் பெற **BIOTIN H** உதவுவதாக விஞ்ஞானரீதியாக கண்டறியப்பட்டுள்ளது.

எமது அபிமான வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!
அனேகமானோரின் வேண்டுகோளுக்கிணங்க இன்றுமுதல் யாழ்நகரின் எல்லா முன்னணி பார்மஷிகளிலும் **BIOTIN H250** கிடைக்கப்பெறும்.

ஆர்கெம் - கொழும்பு.
தொ.இ. 01-470290, 077-805738.
E-mail: arkem@sltnet.lk



**காண்பவர் தூற்றி காறி உமிழ்ந்திட
வாழ்வது வாழ்க்கையோ? - உன்
மனதினை மயக்கிடும் மதுவுக்கும் போதைக்கும்
அடிமையாய் வாழ்வதோ? இந்த அவலமும் தேவையோ?**

(C/21420)



## இளம் பருவத்தினர்க்கு fit ஆன 18 +plus Youth Savings Account கணக்கொன்று





- உயர்கல்விக்கு புலமைப்பரிசில்
- ரூ.500,000/-க்கு ஆயுள் காப்புறுதி
- வங்கிக் கடன் வசதி
- திருமணத்தின்போது பரிசாக ஒரு பவுண் தங்கம்
- ATM காட், CREDIT காட்
- முதல் குழந்தைக்கு பணத்துடன் ரண் கெகுளு சேமிப்புக்கணக்கு

**இலங்கை வங்கி**
உங்கள் தேவைகளைச் சந்திக்கும்

(C-21097)



கிளிநொச்சித் தமிழ்ச் சங்கம் ஏற்பாடு செய்த வள்ளுவர் விழா நிகழ்வுகள் அண்மையில் கிளிநொச்சி கலவெட்டித்திடல் நாகேஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் விருந்தினராகக் கலந்துகொண்ட வங்கி உத்தியோகத்தரும், தமிழ் அபிமானியுமான பொன்.கணேசமூர்த்தி உரை நிகழ்த்துவதை முதலாவது படத்திலும் -

தமிழ்ப் பணிகளுக்காக சிவஸ்ரீ ச.உருத்திரபுர ஈஸ்வரக்குருக்கள் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரட்ணத்தினால் பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவதை இரண்டாவது படத்திலும காணலாம். கண்டாவளை பிரதேச செயலர் எஸ்.மத்தியாஸ், தமிழ்ச் சங்கத் தலைவர் டாக்டர்.ச.முருகானந்தன், செயலாளர் வே.பரமநாதபிள்ளை மற்றும் பலரும் படங்களில் காணப்படுகின்றனர். (எ)

## கராத்தே சங்க கூட்டம்

யாழ்ப்பாணம்,மே15

யாழ் மாவட்ட கராத்தே சங்கக் கூட்டம் எதிர்வரும் 18ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற வுள்ளது

நிர்வாகக்குழு அங்கத்தவர்களை மேற்படி கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## கொடிகாமத்தில் வாகனங்கள் பதிவு

தென்மராட்சி,மே15

முகாமாலை ஊடாக பொருள்களுடன் செல்லும் வாகனங்கள் அனைத்தும் கொடிகாமத்தில் உள்ள சிவில் அலுவலகத்தில் பதிவுசெய்யப்படுகின்றன.

சைக்கிள்களில் பொருள்கள் கொண்டுசெல்வோரும் பதிவினை மேற்கொண்டே முகாமாலை ஊடாகச் செல்லவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளதையடுத்து கொடிகாமத்தில் பெருமளவு வாகனங்கள் நீண்ட வரிசையில் நிற்பதைக் காணமுடிகிறது. (க-117)

# யாழ்.பல்கலைக்குத் தெரிவான 13 பேரவை உறுப்பினர் விவரம்

கோண்டாவில்,மே15

யாழ்.பல்கலைக்கழக பேரவைக்குத் தெரிவான புதிய உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

நாளை வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வரும் வகையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைககுழு இந்த நியமனங்களை வழங்கியுள்ளது.

நியமனம் பெற்ற 13 உறுப்பினர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

க.சண்முகநாதன் (யாழ்.அரச அதிபர்), சிவஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வரக் குருக்கள் (சர்வதேச இந்துமத குருபீடாதிபதி), அருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் (கத்தோலிக்க குரு/கல்வியியலாளர்), அதிவண.எஸ். ஜெபநேசன் (பேராயர், தென்னிந்தியத திருச்சபை/கல்வியியலாளர்).

அருட்கவி சீ.விநாசித்தம்பி (இளைப பாறிய அதிபர்), பேராசிரியர் வ.ஆறுமுகம் (வாழ்நாள் பேராசிரியர்), திருமதி ம.திருச்சிற்றம்பலம் (இளைப பாறி ப அதிபர் - இராமநாதன் கல்லூரி), சி.ஜெயரட்ணம் (இயக்குநர் - தொழிநுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம்).

வைத்திய கலாநிதி எஸ்.சிவானந்தராஜா (மருத்துவ அலுவலர்), மு.திருநாவுக்கரசு (இளைப்பாறிய நீதிபதி), க.ஜெயரட்ணம் (இளைப்பாறிய அதிபர், தொழில் நுட்பக் கல்லூரி), ஈ.சரவணபவன் (நிர்வாக இயக்குநர் - உதயன் நிறுவனம்), பா.தவபாலன் (சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்).

புதிய பேரவை உறுப்பினர்களுக கான கூட்டம் எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக் கழகத்தில் நடைபெறும். (எ-ரி)

# வன்னியிலிருந்து வருபவர்கள் செயலகத்திற்கு படையெடுப்பு

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.செயலகத்தில் கடந்த சில தினங்களாகப் பொதுமக்களின் வருகை மிகவும் அதிகமாகக் காணப படுகிறது.

கடந்தகால இடம்பெயர்வினால் வன்னி மற்றும் ஏனைய இடங்களில் வசித்துவந்த குடாநாட்டு மக்கள் ஏ-9 தரைவழிப்பாதை திறக்கப்பட்டதை அடுத்து இங்கு வருகைதரத் தொடங்கியுள்ளனர்.

இவ்வாறு வருகை தரும் மக்கள் தமது பிறப்புச் சான்றிதழ்கள், விவாகச் சான்றிதழ்கள், காணி உறுதிகள மற்றும் வாக்காளர் இடாப்பின் பிரதிகள், தேசிய அடையாள அட்டைகள் என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதற்காகச் செயலகத்தில் உள்ள அந்தந்த அலுவலகங்களுக்கு இவர்கள் படையெடுக்கின்றனர். (க-10)


## கண்ணீர் அஞ்சலி

நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய
சைவ மகா சபையின் தலைவர்
**இ.துரைசாமியின் அன்பு மகன்**
**சுரேந்திரன்**

அவர்களின் மறைவினால் அவரது குடும்பத்தினருக்கு ஏற்பட்டுள்ள துயரில் நாமும் பங்கு கொள்வதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**நாரந்தனை வடக்கு தான்தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய பரிபாலன சபையினரும், அம்பிகை அடியார்களும்.** (3762)


### கொக்குவில் இந்துமயானத்தில்

# கட்டாக்காலி நாய்களைப் புதைப்பதா? வடபிரதேச இந்துப் பேரவை சீற்றம்

யாழ்ப்பாணம்,மே15

கொக்குவில் இந்து மயானத்தில் கட்டாக்காலி நாய்களைப் புதைப்பதற்கு எடுக்கப்படுவதாகக் கூறப்படும் நடவடிக்கைகளை உடனடியாகக் கைவிடுமாறு கோரி வடபிரதேச இந்துப் பேரவையினர் நல்லூர் பிரதேச சபைத் தலைவருக்கு மகஜா ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இந்து மயானங்கள் இந்துக்களின் சமயக்கிரியைகளை (அபரக் கிரியைகள்) முறைப்படி நிறைவேற்றுவதற்கும் -

பாவங்களை நீக்கி ஆன்மாக்களை சிவனோடு சேர்ப்பிக்கும் புனித இடங்களாகவும் திகழ்கின்றன.

எனவே, இத்தகைய புனிதமான இடங்களில் ஒன்றான கொக்குவில் இந்துமயானத்தில் கட்டாக்காலி நாய்களைக் கொன்று புதைப்பதற்கு நல்லூர் பிரதேச சபையினர் நடவடிக்கை எடுப்பதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

ஆகவே, இந்துக்களின் புனித இடங்களுக்கும், சமயக்கிரியைகளுககும் மதிப்பளிக்கும் வகையில் கொககுவில் இந்துமயானத்தில் கட்டாக்காலி நாய்களைப் புதைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் எனக்கேட்டுக் கொள்கின்றோம்- என்று அதில் உள்ளது. (எ)

## விளையாட்டு வீரர் 17பேர் திருமலைக்கு!

யாழ்ப்பாணம்,மே15

வடக்கு - கிழக்கு மாகாண சபையினால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்வதற்காக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 17 வீரர்கள், வீரங்கனைகள் நாளை வியாழக்கிழமை திருகோணமலைக்கு செல்லவுள்ளனர்.

மரதன் ஓட்டம் மற்றும் சைக்கிள் ஓட்டப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வீர்களே இவ்வாறு செல்லவுள்ளனர். இவர்களுக்கான போட்டிகள் எதிர்வரும் 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. (க-10)

## மாத இறுதியில் புங்கங்குளம் சந்தை திறப்பு

யாழ்ப்பாணம்,மே15

யாழ்.மாநகரசபையின் நிதியில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் புங்கங்குளம் சந்தை இம்மாத இறுதியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இதற்கென ஒரு லட்சத்து 70 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இதனை அமைக்கும் வேலைகள் யாவும் துரிதமாக நடைபெற்று வருவதாகவும் மாநகரசபையின் முதல்வர் செ.கந்தையன் தெரிவித்துள்ளார்.

புங்கங்குளம் ரயில் நிலையத்திற்கு அருகில் அமைக்கப்பட்டு வரும் சந்தையை மாநகர முதல்வர் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைக்கவுள்ளார். (க-10-8)


*மீண்டும் உங்கள் சேவைக்கு!*

**வஸ்தியன் அச்சகம் & புத்தக விற்பனை நிலையம்**
**BASTIAN PRESS AND BOOK SALES CENTRE**

நவீனமயப்படுத்தி *(நீண்டகால அனுபவமிக்கவர்களால்)* இன்று (15.05.2002) புதன்கிழமை காலை 9.10 - 10.15 மணிவரை உள்ள சுபமுகூர்த்தவேளையில் ஆரம்பிக்க இருப்பதால் அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் வந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கணனிப்பதிப்பு, ஸ்கிறீன் பிறின்ரிங், ஓ(F)ப்செற் பிறின்டிங் ஆகியன மூலம் சகலவிதமான அச்சுவேலைகளையும் சிறந்தமுறையில் செய்துகொடுப்பதோடு, அப்பியாசக் கொப்பிகள், C.R., லெஜர், நோட்புத்தகம், பொக்கட் பாட், ரைப்பிங் பேப்பர், றோணியோ பேப்பர், போட்டோ கொப்பி பேப்பர் என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

*குறிப்பு:* சகல அச்சகங்களுக்கும் கட்டர்க்கத்திகள் தீட்டியும், அலுவலகப் படிவங்கள், கொப்பி கட்டுவதற்குத் தேவையான பேப்பர்களுக்கும் றூளிங் போட்டும் கொடுக்கப்படும்.

வஸ்தியன், இல.402, சுண்டுக்குளி வீதி, யாழ்ப்பாணம்.
திரு.க.இரவிச்சந்திரன் (ரவி), இல.60, செட்டித் தெரு, நல்லூர்.

இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (3755)



## மரண அறிவித்தல்கள்

### துரைசுவாமி சுரேந்திரன்

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசுவாமி சுரேந்திரன் 14.05.2002 செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் மேனகாவின் அன்புக் கணவரும், கௌசிகாவின் அன்புத் தகப்பனாரும் இராமலிங்கம் துரைசுவாமி (கனகலிங்கம், இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர்), கமலாவதி ஆகியோரின் அன்பு மகனும் வீரசிங்கம் நல்லம்மாவின் அன்பு மருமகனும் மகேந்திரன் (ஆஸ்திரேலியா), ரவீந்திரன் (ஆஸ்திரேலியா), நரேந்திரன் (ஆஸ்திரேலியா), இந்திரா, பாலேந்திரன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் அனுசியா (ஆஸ்திரேலியா), கௌரிநாயகி (ஆஸ்திரேலியா), பத்மாசினி (ஆஸ்திரேலியா), காலஞ்சென்ற உதயகுமார் (ஆசிரியர்), தேவிகா, ஜெயக்குமார் (ஆசிரியர்), வேணுகா (ஆசிரியர்), விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிக்கிரியைகள் இன்று (15.05.2002) புதன்கிழமை பிற்பகல் 2மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாரந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பண்ணை வீதி, நாரந்தனை, ஊர்காவற்றுறை.*

தகவல்: **இ.துரைசுவாமி** (கனகலிங்கம்) (தகப்பன்) (3761)

### இளையதம்பி பொன்னுத்துரை

(இளைப்பாறிய சிமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், K.K.S.)

அளவெட்டி வடக்கை (புதுவளவு) பிறப்பிடமாகவும், ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி பொன்னுத்துரை நேற்று (14-05-2002) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற இளையதம்பி - இளையபிள்ளை தம்பதிகளின் ஏக புதல்வனும் காலஞ்சென்ற சோதிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லம்மா, காலஞ்சென்ற தங்கம்மா, அன்னப்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் கௌரி, ஜெயபாலன் (கண்ணன் - கூல்எயார்), ரஞ்சன் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும் பத்மநாதன் (ஓய்வு பெற்ற விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்), சுசீலா, அனுசுயா, ஆகியோரின் அன்பு மாமனாரும் றமணன், விவேக், ஷாலினி, லாவண்யா, தாரணி, ரம்யா, காருண்யா, ஆரண்யா ஆகியோரின் பேரனும், காலஞ்சென்ற குமாரவேலு (மலேசியா), காலஞ்சென்ற முத்துவேலு (பிரதம கணக்காளர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக்கிரியைகளின் பின் அவரது விருப்பப்படி யாழ்ப்பாணம் மருத்துவ பீடத்திற்கு இன்று (15.05.2002) புதன்கிழமை காலை 9.00 மணிக்கு கையளிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கௌரி வாசம்', ஊரெழு மேற்கு, சுன்னாகம்.* (3765)

தகவல்: **பொ.ஜெயபாலன் (கண்ணன்** - மகன்)
**வே.பத்மநாதன்** (மருமகன்)

## வெள்ளி முதல் மீண்டும் பூசைகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மே15

சாவகச்சேரி, சப்பச்சிமாவடி பிள்ளையார் ஆலயத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை தொடக்கம் மீண்டும் நித்திய பூசைகள் ஆரம்பமாகவுள்ளன.

அன்றையதினம் காலையில் பிராயச்சித்த அபிஷேகம் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பூசைகள் ஆரம்பமாகவுள்ளன. (க-10)

தரைவழிப் பாதையூடாக லொறிகள் வருவதால்

## சங்கானை ப.நோ.கூ.சங்க கிளைகளில் சகாய விலையில் பொருள்கள் விற்பனை

சண்டிலிப்பாய்,மே15

சங்கானை பல நோக்குக் கூட்டுறவு சங்கம், ஏ-9 தரைவழிப் பாதை திறக்கப்பட்டதை அடுத்து கொழும்பிலிருந்து உலர் உணவுப் பொருள்கள், பால்மா மற்றும் பலவேறு பொருள்களை சங்க லொறி மூலம் தருவித்து கிளைகள் ஊடாக சகாய விலையில விநியோகம் செய்துவருகின்றது.

கடந்த காலத்தில் யாழ்நகரிலுள்ள தனியார் வர்த்தகர்களிடம் பொருள்களைக் கொள்வனவு செய்து விநியோகம் செய்தமையால் குறைந்த விலையில் அவற்றை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டது என்றும், தற்போது கொழும்பிலிருந்து தரைவழிப்பாதை ஊடாக சங்க லொறி மூலம் எடுத்து வரப்படுவதால் குறைந்த விலையில் பொருள்களை மக்களுக்கு வழங்கக் கூடியதாக உள்ளது என்றும் சங்கத் தலைவர் ம.சற்குணசிங்கம் இது பற்றி தகவல் தருகையில் தெரிவித்தார். (க-135)

## வாரத்தில் 3 தினங்களே ஆஸ்பத்திரி திறப்பு

பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலை வாரத்தில் மூன்று தினங்களே தற்போது செயற்பட்டு வருகின்றது. ஏழாலை அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியான டாக்டரே திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் இங்கு வந்து நோயாளர்களுக்கு சிகிச்சையளித்து வருகின்றார். இதனால் ஏனைய நாள்களில் நோயாளர்கள் இங்கு சிகிச்சை பெறமுடியாது பாதிபடைந்து வருகின்றனர். (க-135)

## கூட்டுறவுச் சங்க அலுவலகத்திற்கு கணனி அன்பளிப்பு

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச சங்கத்தின் தலைமை அலுவலகத்தின பயன்பாட்டுக்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டப் பிரிவு (யு.என்.டி.பி.) கணனி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இதேவேளை, சங்க உறுப்பினர்களுக்கு சுயதொழில் முயற்சிக் கடன வழங்குவதற்காகவும் இந்த நிறுவனம இச்சங்கத்திற்கு 2 லட்சம் ரூபாவை அண்மையில் வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. (க-135)



உ

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்

## அறிவித்தல்

உயர் திருவிழாக் காலங்களில் தற்காலிக கடைகள்
உயர் திருவிழாக் கால உடை தேங்காய்களுக்கான

### பகிரங்க ஏலம்

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் உயர்திருவிழா (மஹோற்சவம்) *எதிர்வரும 10.6.2002 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 25.06.2002 செவ்வாய்க் கிழமை தெற்போற்சவத்துடன் நிறைவு பெறும்.*

இக்காலத்தில் தற்காலிகமாக வியாபாரம் செய்வதற்கு அறங்காவலர் சபையால் சுட்டிக்காட்டப்படும் இடங்கள் எதிர்வரும் *25.05.2002 சனிக்கிழமை காலை 10 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விடப்படும்.*

மட்டுப்படுத்தப்பட்ட கடைகள் ஆலய வீதியின் வழமையான இடங்களிலும் மேலதிகமான கடைகள் கோயிலின் தென்புற நுழைவாயிலின் வெளியே கோயிலுக்குச் சொந்தமான காணிகளிலும் வியாபாரம் செய்ய அனுமதி வழங்கப்படும். உயர் திருவிழாக்காலங்களில் சேரும் உடை தேங்காய்களுக்கான பகிரங்க ஏலமும் இடம்பெறும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

குறிப்பு:- ஏலத்தில் பங்குகொள்பவர்கள் தாங்கள் கேட்கும் ஏலத்தின் பணத் தொகையில் மூன்றில் ஒரு (1/3) பகுதியை உடனடியாகச் செலுத்துதல் வேண்டும்.

**கனக.உருத்திரகுமாரன்** B.A.
*கௌரவ செயலாளர்,*
*அறங்காவலர் சபை.*

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு. (3747)

## எம் இனிய நல்வாழ்த்துக்கள்

*யாழ். மண்ணில் பாதம் பதிக்கும்*

★ செலான் வங்கி

★ செலிங்கோ ட்ரவல்ஸ் அன் டுவர்ஸ்

★ செலிங்கோ குளோபல் சேர்விசன்

ஆகிய நிறுவனத்தினரும் யாழ்ப்பாணத்தில் இன்று தமது சேவையை ஆரம்பிப்பதையிட்டு பெருமகிழ்ச்சியடைவதுடன், இவர்களது சேவைகள் மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்.

## நியூ கமல் செரமிக்ஸ்

37, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(C/222116)

## எட்டாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 21 - 12 - 1943

உதிர்வு 15 - 05 - 1994



### அமரர் அந்தோனிப்பிள்ளை இம்மனுவல் ஜெயசிங்கம்

*(மதுவரி அத்தியட்சகர்)*

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனை வேண்டுகின்றோம்.

கரவெட்டி வடக்கு,
கரவெட்டி. (3732)

இவரது பிரிவால் துயருறும்:
மனைவி, உறவினர்கள், நண்பர்கள்.

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



## திருமதி வேலுப்பிள்ளை செல்லம்மா

(வண்ணாங்கேணி, பளை)

*(வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும், சின்னத்தம்பி - சின்னம்மாவின் மகளும், பெரியதம்பி - வள்ளிப்பிள்ளையின் மருமகளும்)*

தோற்றம்: 1927 - 04 - 05 மறைவு: 2002 - 04 - 25

நாங்கள் இடம்பெயர்ந்து இருந்தவேளையிலும் அன்னார் நோயுற்று இருந்த வேளையிலும் அவரினது இறுதிக்கிரியைகளில் பலவழிகளிலும் உதவி செய்த உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதுடன், எதிர்வரும் (25.05.2002) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

★ தனிப்பட்ட முறையில் அழைப்பு கொடுக்காதமைக்கு மனம் வருந்துகின்றோம்.

*பிரிவால் துயருறும்:*

*பிள்ளைகள்:-* துரைசிங்கம், அன்னலிங்கம், தர்மலிங்கம் (கனடா), தவமணி, சிவபாக்கியம், காலஞ்சென்ற குணரத்தினம், நவமணி, நவரத்தினம், லீலாவதி, சிவராசா, தெய்வேந்திரம் (கனடா), ரவீந்திரம் (சுவிஸ்).

*மருமக்கள்:-* கோமேதபுஸ்பம், செல்வமணி, சந்திரா, அரியதேவி, யோகராசா, மல்லிகாதேவி, அ.மல்லிகாதேவி, தவமணி, பொன்னுத்துரை, விஜயகுமாரி, ராஜேஸ்வரி.

*பேரப்பிள்ளைகள்:-* கமலாதேவி, கமலேஸ்வரன், செல்வமணி, ரூபசிங்கம், வசந்தி, காந்தரூபன், சந்திராதேவி (பரீஸ்), இந்திராதேவி, ரவிச்சந்திரன், சித்திராதேவி, சுந்தரலிங்கம், அமிர்தலிங்கம், மோகனவதி, சுமதி, பிராபாவதி, அனுஸ்கரன், அசேந்திரன், அசோகரன், அனுசியா, அசோபனா, அருள்வாணி, பிரபாகரன், தயாநந்தன், சுதாகரன், பிரதீபா, சுகிர்தா, கிருசாந்தன், டுசாந்தன், கிருசாந்தா, மல்லிகா, விஜயா, நிர்மலா, அமுதா, சண்முகதாஸ், சண்முகமூர்த்தி, சண்முகலிங்கம், இந்துமதி, தனுசாந்தி, நந்தினி, தயாளினி, சுஜாதா, கங்கா, சிவரஞ்சினி, சத்தியா, கருணாவதி, ரூபவதனா, சசிகரன், வனிதா, சாந்தன், காந்தன், மோகனப்பிரியா, கீதன், ஜதீஸ்வரன், சிவாகரன், சதீஸ்கரன், சிறீகரன், சிவதாசன், மேகலா, யசோகரன், சர்மிளா, சுதாகரன், குணவித்தியா, மோகனதாஸ், குகதாஸ், தர்மினி, மோகனா, தர்சன், தயன்சன், அனுசாந்தி, அஜன், றஜீவ், சஜ்சித், தனுசிகா, தனுசன், மயிரீஸ்வரன், மணிவண்ணன், றஞ்சித்குமார், மகேந்திரன், சிவானந்தம், வசந்தன், ஜேரூபன், சுரேஸ், அசன், வினோதினி.

*பூட்டப்பிள்ளைகள்:-* கமலினி, கயேந்தினி, மதுசனா, மதுசன், கௌதரன், கௌசிகரன், கௌசலா, கபினா, அபிராமி, கௌசிகா, யசோதா, பகீர்தா, டிலக்ஷனா, டிலக்ஷன், தனுசா, றன்சிகன், ஜெனுசா.

*கண்டி வீதி, பளை.* (3647)

# பதவி வெற்றிடம்

## கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவை

### வெற்றிடங்கள்

1. a. கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்
(Junior Security Officer)
(30-முப்பதிற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் உண்டு)

b. பாதுகாப்பு மேற்பார்வையாளர்
(Security Supervisor)

2. கல்வித் தகைமை:- க.பொ.த. (சா.த.) சித்தி
(ஓய்வுபெற்ற பொலீஸ்/படை உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

3. a. உயரம்:5'4"(குறையாமல்)
மார்பு: 32"(குறையாமல்)
(நல்ல கண்பார்வையும், நல்ல திடகாத்திரமும் இருத்தல் வேண்டும்)
(25 வயதுக்குக் குறையாதிருத்தல் வேண்டும்)

**சம்பளம்:** தொடக்க சம்பளமாக ரூபா 3500/- மற்றும் கடமை வரவுக்குரிய ஊதியம் (Attendance Bonus) வழங்கப்படும். (தகுதிக்கேற்ற சம்பள மாற்றம் உண்டு)

**நேர்முகப் பரீட்சை:** 18-05-2002சனிக்கிழமை...
காலை 10.00 மணி
(கிராம அதிகாரியின் நற்சான்றிதழ்களுடன் வரவும்)

*43, கல்லூரி வீதி*
*(யாழ்.இந்துமைதானத்திற்கு முன்பாக)யாழ்ப்பாணம்.*
- பணிப்பாளர்.

(C/22140)

---

# அகில இலங்கை சைவக்குருமார் அர்ச்சகர் சபை

## சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

மேற்படி எமது சபையால் இன்று (15.05.2002) அதிர்ஷ்டம் பார்க்கப்படவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 30.06.2002 ஞாயிற்றுக்கிழமைக்கு பிற்போடப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

சிவஸ்ரீ சி.கிருபாகரக்குருக்கள்
*(தலைவர்,*
*பயிற்சிக் கல்லூரி செயற்குழு)*

(3775)

---

# கண்ணீர் அஞ்சலி

## இ.பொன்னுத்துரை

(ஊரெழு மேற்கு)

ஊரெழு கிராமத்தின் உயர்ச்சியை உளங்கொண்டு
தள்ளாத வயதிலும் சலியாது தொண்டாற்றிய
மண்ணின் மைந்தன், எங்கள் கழகத்தின் போசகர்
திருவாளர் இ. பொன்னுத்துரை அவர்களின் மறைவு குறித்து
அன்னாருக்கு எங்கள் கண்ணீர்ப் பூக்களால்
அஞ்சலி செலுத்துகின்றோம்.

சைவாலய முன்னேற்றக் கழகம்.
கலைவாணி சனசமூக நிலையம்.
கலைவாணி முன்பள்ளி.

ஊரெழு. (3777)

---

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் இ. பொன்னுத்துரை

(ஊரெழு மேற்கு)

எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க நீண்டகால உறுப்பினரும் பாடசாலைக்காக அரும்பணியாற்றியவரும் நலன்விரும்பியுமான இ.பொன்னுத்துரை அவர்கள் காலமானதையிட்டு அன்னாரிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர். ஆசிரியர்கள். மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள்.
யா/ஊரெழு கணேச வித்தியாலயம்.

(C/22142)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகத்தினால் அமரர் டாக்டர் சிவகுரு ஞாபகார்த்த சுற்றுக்கேடயத்திற்காக நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ வதிரி டைமன்ஸ் வி.க.எதிர் யாழ்.பல்கலைக்கழக வி.க.

★ நாவாந்துறை கலைவாணி வி.க. எதிர் யாழ்.சென் அன்ரனீஸ் வி.க. (ம-86)

★ ★ ★

கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் யாழ்.பொற்பதி வி.க. அணியும் வதிரி டயமன்ஸ் வி.க. அணியும் மோதும். இந்த ஆட்டம் மாலை 4.30 மணிக்கு இடம் பெறும்.

---

## சமாதானத்தை...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

யற்றவராகின்றார். அதனால் இவரை ஓர் அமைதியிழந்த மேதை எனச் சிலர் வர்ணிப்பார்கள். அத்தோடு வியாபாரத்துறையிலும்கூட மற்றவர்கள் வியாபாரத்துக்கு முன்னேற்றமானது எனக்கூறும் அபிப்பிராயங்களை எதுவித ஆதாரமும் இல்லாவிட்டாலும் கூட அதனை நம்பி அதில் ஈடுபடும் தன்மையுடையவர். அதனால் இழப்புக்களையும் ஏற்றுள்ளார். பலர் இவருக்குப் பல சந்தர்ப்பங்களில் பல புத்திமதிகளைக் கூறினாலும் அதனால் தன்னைத் திருத்திக் கொண்டவரல்ல.

"...எவ்வாறாயினும் முடிவாகக் கூறுவதாயின், இவர் மிகுந்த இறை பக்தி உடையவர். அதனால் சமய வாழ்க்கையிலே மிகையாகப் பிணைந்தவர். தெய்வத் தன்மைகள் இவருக்கு வாழ்க்கையில் வழிகாட்டியாக அமைந்தன. அதனால் இவரது வாழ்க்கை குற்றம், குறையில்லாததாக அமைந்தது. கொத்தலாவல, தெய்வத்தன்மை வழிகாட்டலில் அபார நம்பிக்கை உடையவர்..." ★

---

**நிரஞ்சனாஸ்** சங்கானை
LEONARDO DIC APRIO
KATE WINSLET
**டைட்டானிக்**
(தமிழாக்கம்)
காட்சிகள்: 10.30, 2.30, 5.30
(C-21981)

---

**லஷ்சுமி** இணுவில்.
ரஜனி, நக்மா, ரகுவரன்
நடித்த
**பாட்ஷா**
(ரீலஸ்)
காட்சிகள்-10.30,2.30 (ப.நே.)
(3774)

---

**ராஜா** யாழ்ப்பாணம்
5ஆவது ஜனத்திரள் வாரம்
இளையதளபதி விஜய், உலக அழகி
பிரியங்கா சோப்ரா, விவேக் நடித்த
**தமிழன்**
தினசரி: 10.30, 2.30
சனி, ஞாயிறு: 10.30, 2.30, 5.30 (பு.நே.)
(C/21980)

---

**நாகம்ஸ்** சுன்னாகம்
விஜயகாந்த் (இருவேடங்கள்)
சிம்ரன், நாசர், கபாலி
*நடிப்பில்*
**கண்ணுபடப்போகுதையா**
(ரீலஸ்)
காட்சிகள்: 11.00,3.00 (பு.நே.)
16ஆம் திகதி முதல் சமுத்திரம்
(3763)

---

*புகைப்படப் பிடிப்பாளர்களுக்கு!*

# புகைப்படக் கண்காட்சியும் கருத்தரங்கும்

இலங்கையின் முன்னோடிப் புகைப்படப் பிரதியாக்கம் செய்யும் PHOTOCHROME Colour LAB (போட்டோகிறோம் கலர்லாப்) இன் பிரதம பணிப்பாளர் திரு.கேகொட அவர்கள், ஒரு புகைப்படக் கண்காட்சியையும் கலந்துரையாடலையும் (வியாபார நோக்கம் அல்லாது கலை நோக்கத்துடன் எடுப்பதைப்பற்றி) இன்று (15.05.2002) புதன்கிழமை நாவலர் கலாசார மண்டபத்தில் (நாவலர் வீதி) பி.ப.2மணி தொடக்கம் நடத்த இருப்பதால் தவறாது சகல புகைப்படப் பிடிப்பாளர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உத்தியோகபூர்வ முகவர்கள்:

ஸ்ரீ வல்லிபுரா போட்டோ,
545, பருத்தித்துறை வீதி, நல்லூர்.

மக்ஷல் கவுஸ்,
20,யுபிலி பஜார், யாழ்ப்பாணம்.

(3768)

---

# தேவை

## விற்பனைப் பிரதிநிதி

(SALES REPRESENTATIVE)

மேற்படி பதவிக்குத் தகுதி உடையவர்கள்
உரிய ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**SRI MURUGAN**
303, K.K.S. ROAD,
JAFFNA.
T.P.: 2670

(C/22138)

---

# இறைச்சிக்கோழி விற்பனைக்கு

சுத்திகரிக்கப்பட்ட BAIRHA FARM கோழி இறைச்சி 1 kg - 200/- மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு கொடுக்கப்படும். அத்துடன் CHICHEN SAUSAGES, MEAT BALLS, ANCHOR BUTTER, FLORA MARGERINE ASTRA, ELEPHANT HOUSE SPONGE ROLE CAKE என்பனவற்றை எம்மிடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். (3778)

**தொடர்பு: வரணி மிசன் பண்ணை விற்பனை நிலையம், 145, நவீன சந்தை, யாழ்ப்பாணம். T.P.: 2868**

---

# கண்ணீர்ப் பூக்கள்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி
2ஆம் வருட கணிதப்பிரிவு ஆசிரிய மாணவி
செல்வி நந்தினி சந்திரன் *அவர்களின் அன்புத் தாயார்*

## திருமதி பராசக்தி சந்திரன்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(3772) **யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிச் சமூகம்.**

---

# மரண அறிவித்தல்கள்

## செல்வன் கந்தசாமி தினேஷ் (தீபன்)

திருநெல்வேலி, பத்திரகாளி கோயிலடியைப் பிறப்பிடமாகக்கொண்ட செல்வன் கந்தசாமி தினேஷ் 03.05.2002 வெள்ளிக்கிழமை மெச்சிக் கோவில் அகாலமரணமானார்.

அன்னார் கந்தசாமி - சிந்தாதேவியின் கனிஷ்ட புதல்வனும் கோகிலவாணி, றமேஷ் (கனடா), சதீஸ், றதீஸ் (ராயு அம்பாள் ஓவியக் கலையகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற சிற்பாச்சாரியார் ஆறுமுகம்-பொன்னம்மா மற்றும் சின்னராசா - வாலாம்பிகை ஆகியோரின் பாசமிகு பேரனும் ஸ்ரீகாந்தனின் மைத்துனரும் தேனுஜனின் அன்பு மாமனாரும் ஆவார்.

இச்செம்மலின் இறுதிக்கிரியை மெச்சிக்கோவில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.ஆ.கந்தசாமி
(சிற்பாச்சாரியார்-ஆறுமுகம் சிற்பாலயம்)
(தந்தை)

*அரசடி வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*யாழ்ப்பாணம்.*
(3767)

## திருமதி அமிர்தாம்பிகை செல்லையா

மறவன்புலோவைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அமிர்தாம்பிகை செல்லையா நேற்று (14.05.2002) செவ்வாய்க்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார் செல்லையாவின் அன்பு மனைவியும் மறவன்புலோவைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - சிவக்கொழுந்துவின் அன்பு மகளும் சந்திரசேகரம், யோகாம்பிகை, பிறைசூடி, லோகநாதன், நகுலேஸ்வரி, கோமளாதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சத்தியவதி (Colombo), ஜெயவதி (உரும்பிராய் வடக்கு), தயாவதி (London), பிறேமாவதி (London), விஜயபாலன் (Canada), கருணாவதி (Canada), கெங்காவதி (Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மதிரூபன் (Banker-H.N.B.,Colombo), நாகேஸ்வரன் (முன்னாள் கிராம சேவையாளர், மந்துவில் மேற்கு-Canada), ஸ்ரீரங்கநாதன் (London), முரளிதரன் (London), சிவகுமரர் (Canada), சத்தியகலா (Canada), ஸ்ரீதரன் (Canada), ஹரிகிருஷ்ணா (Canada) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் கிருத்திகான், கோமுகன், நிதர்சன், ரம்யா, சாரங்கி, மதுரா, பிரியங்கன், நவீன், விதுஷன், சரண்யன், மீனா, மிதுஷா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.ஜெயவதி
(மகள்)

*கல்லூரி வீதி,*
*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
(3766)

## விஸ்வலிங்கம் லோறன்ஸ் சற்குணநாதன்

*(ஊழியர் S.M.(H).O,*
*சுகாதார சேவைப் பணிமனை, யாழ்ப்பாணம்.)*

கோவிலாக்கண்டியைச் சொந்த இடமாகக் கொண்டவரும் 3ஆம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகக் கொண்டவருமான வி.லோ.சற்குணநாதன் நேற்று (14.05.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அற்புதமலரின் அன்புக் கணவரும் குமார், சுமதி, எட்வின், சுகந்தி ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஜெயாவின் (கத்தோலிக்க அச்சகம்) மாமனாரும் Josephஇன் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது பூதவுடல் நாளை (16.05.2002) வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் (பு.நே.) அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஜெயா
(மருமகன்)

*120,3ஆம் குறுக்குத் தெரு,*
*யாழ்ப்பாணம்.*
(3776)

## மன்னிப்பு சபைக்குழு வருகிறது

லண்டனை தலைமையகமாகக் கொண்ட சர்வதேச மன்னிப்புச் சபை உறுப்பினர்கள் குழு ஒன்று அடுத்த மாதம் இலங்கை வரவிருக்கின்றது.

## சமூகவிரோத....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கசிப்பு உற்பத்தி, விற்பனை, போதை வஸ்து விற்பனை, தெருச்சண்டை, கோஷ்டி மோதல், பெண்கள் மீதான சேஷ்டைகள் போன்ற சமூகவிரோத - கலாசாரச் சீரழிவான செயல்கள் குடாநாட்டில் தலையெடுத்துள்ளன. விடுதலைப் புலிகளாகிய நாங்கள் இதனை ஒருபோதும் அனுமதிக்கப் போவதில்லை. இத்தகைய செயல்களை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்தச் செயல்களில் ஈடுபடுபவர்கள், அவற்றுக்குத் துணை போகிறவர்கள், தூண்டுபவர்கள் ஆகியோர் குறித்து எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன.

சமூக அமைப்புக்களின் பங்களிப்புடன் இந்தச் செயல்களை முற்று முழுதாக ஒழிப்போம். இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும்.

எமது மக்களின் தனித்துவமான வாழ்க்கையைக் கட்டியெழுப்ப - தமிழ்மக்களின் தேசியச்ச... கட்டிக் காக்க - நாங்கள் கொடுத்த விலை அதிகம். இதை மனதில் கொண்டு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்கள் தாமாகவே திருந்தி நடக்க வேண்டும்.

- இவ்வாறு அரசியல்துறையினர் தெரிவித்தனர். (ஐ-3)

## பொலீஸ் சுட்டு சந்தேகநபர் உயிரிழப்பு!

வாதுவை, பொத்துப்பிட்டிய பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் கொள்ளைச சந்தேகநபர் ஒருவர் பொலீஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார். எட்டியாந்தோட்டை ஆடைத் தொழிற்சாலையின் சம்பளப் பண மான 69 லட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றவர் என்று கருதப்படும் நபரே கொல்லப்பட்ட வராவார். அவரைத் தேடிச்சென்ற பொலீஸார் மீது அவர் கிரனேட் வீசித்தாக்கியதாகவும் - பொலீஸார் திருப்பிச் சுட்டதில் அவர் உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.


வேலணை மேற்கு

### பெரியபுலம் மகா கணபதிப்பிள்ளையார்

(முடிப்பிள்ளையார்) கோயில்

### வருடாந்த மஹோற்சவம் - 2002

| | | | |
|---|---|---|---|
| கொடியேற்றம் | 16-05-2002 | வியாழன் | 11.00 |
| சங்காபிஷேகம் (உற்சவமூர்த்தி) | 17-05-2002 | வெள்ளி | 9.30 |
| சங்காபிஷேகம் (மூலமூர்த்தி) | 19-05-2002 | ஞாயிறு | 9.30 |
| வேட்டைத் திருவிழா | 23-05-2002 | வியாழன் | 2.30 |
| சப்பரம் | 24-05-2002 | வெள்ளி | 7.00 |
| தேர் | 25-05-2002 | சனி | 11.00 |
| தீர்த்தம் | 26-05-2002 | ஞாயிறு | 11.00 |

*மஹோற்சவ காலங்களில் கலந்து எம்பெருமானின் இஷ்டசித்திகளை பெற்றுய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.*

- பரிபாலன சபை.

(3779)


## படையினரை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் கூட்டத்தில் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் கே.சண்முகலிங்கம், மாகாண கல்வி அமைச்சின் பாடசாலைகள் அபிவிருத்திச் செயலர் எச்.எம். சிறிசேன, மாகாணக கல்விப் பணிப்பாளர் ஐ.எம்.இஸ்ஸமன் மற்றும் கடற்படை, இராணுவ, பொலீஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர். புரிந்துணர்வு உடன் படிக்கைப்படி 160 நாள்களுக்குள் பாடசாலைகளில் இருந்து படையினர் வெளியேறிவிடுவர் என்று படை அதிகாரிகள் தெரிவித்ததாகக் கூறப்பட்டது. (ம)


**CEYLINCO PARKWAY MEDICAL REFERRAL CENTRE (CPMRC)**

Word's best quality health-care services and latest technology in medicine by Singapore Parkway Group Pte. Ltd.will be available in Jaffna at CPMRC. 560, 562, Hospital Road, Jaffna, from today (15.05.2002) onwards.

(C/22126)


## வலி.வடக்கு செயலகம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் முன்வைத்துள்ள 12 கோரிக்கைகளும் வருமாறு:-

- அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்று அர்த்தமற்ற முறையில் நிலத்தை ஆக்கிரமிக்காதே!
- கண்ணிவெடிகளை அகற்றி சொந்த மண்ணில் வாழவிடு!
- எமது பாடசாலைகள் அனைத்தையும் கையளி; மாணவர்களது கல்வி உரிமையில் பாரபட்சம் காட்டாதே!
- இடம்பெயர்ந்த பாடசாலைகள் என்று உதவிகள் வழங்காதிருக்கும் பாரபட்சத்தைக் கைவிடு!
- சுயமாக எமது பாரம்பரிய தொழிற்சாலைகளைச் செயற்படவிடு!
- வழிபாட்டு உரிமை, பிதிர்க்கடன் உரிமைகளை மறுக்காதே!
- சொந்த இடங்களில் இதுவரை மீளக்குடியமர்ந்தவர்களது அடிப்படை உரிமைகளைச் செய்துகொடு; அப்பிரதேசங்களிலாவது கண்ணிவெடிகளை அகற்று!
- முகாம் வாழ்வுக்கு முடிவுகட்டு!
- நிவாரணப் பொருள்களது விலையை அதிகரித்து வயிற்றில் அடிக்காதே!
- இடம்பெயர்ந்து, உறவுகள் இழந்த குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கும்போது முன்னுரிமை கொடு!
- மயிலிட்டி காசநோய் வைத்தியசாலை, தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை, புற்றுநோய் வைத்திய சாலை போன்றவற்றை அப்பிரதேசங்களில் மீளத் திற!
- ப.நோ.கூ.சங்கம், ஏனைய வர்த்தக நிறுவனங்களை சொந்த இடங்களில் இயங்கவிடு!

இந்தக் கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தவுள்ளனர்.(ம-3)


MCS

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.(பரமேஸ்வராச்சந்தி அருகே)

**இலவசக்கணனிப்பயிற்சி**

ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனி மயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேடகணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்

பதிவுகள் 18.05.2002 இற்குமுன் நேரில்



**IIS Computer Courses**



- Diploma in MS Office
- Diploma in Internet Technology
- Diploma in Desktop Publishing
- Diploma in Java Programming
- Diploma in Visual C Programming
- Diploma in Visual Basic Programming
- Diploma in Engineering Drawing and AutoCAD
- Technician Diploma in Computer Hardware
- Diploma in Computer Programming
- Diploma in Personal Computer Specialist
- Advanced Diploma in Applied Computer Science

புதிய பிரிவுகள் ஆரம்பம்:
19/05/02 ஞாயிறு காலை 10.00 மணி

A/L - 2002 பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு மட்டும்
Diploma in MS Office
Rs. 2750/=
அகில இலங்கை ரீதியிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்று வடக்குக் கிழக்கில் முன்னணி வகித்துவரும் கணனி நிறுவனம்.

Institute of Informatics Studies
100, Clock Tower Road, Jaffna
TP No : 2831
Branches: Nelliyady, Karaveddy.
Main Street , Chankanai.



**நியூ றோயல் அக்கடமி**

சங்கத்தானை.

**A/L 2003,2004**

வ...த்தகப் பிரிவு

Eco. S.வரதராஜன்
Acc. முகுந்தன்
B.St.முரளி
ஆரம்பம்:-17.05.2002
Fri-3.00p.m.
★ அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக்கொள்ளவும். (3730)



**UNIVAC**

A/L பரீட்சை காரணமாக தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டிருந்த கணனிப் பயிற்சி நெறிகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

எமது நிறுவனத்தில் பயிற்சி நெறிகளைப் பூர்த்திசெய்த சகல மாணவர்களும், தற்போது DCP, M.S.Office படிக்கும் மாணவர்களும் 18.05.2002 ஆம் திகதி 10 மணிக்கு சமுகமளிக்கவும். (3780)

1201, K.K.S. Road, Narchimar Kovilady, Jaffna.

Managing Director UNIVAC


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15.05.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.